விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது ═══ Valampurii ═══

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 07 ஞாயிற்றுக்கிழமை (24.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 309

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# போர்க்குற்றங்களை மறைக்க 3 மில்.பவுண்ஸை அரசு கொடுத்தது

## பி.பி.சி.பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் தொடர்பாக சர்வதேச நாடுகளில் ஏற்பட்டுள்ள அபகீர்த்தியை மாற்றி போருக்குப் பின்னரான சிறிலங்காவின் நன்மதிப்பை உயர்த்துவதற்காக, பிரித்தானியாவின் பரப்புரை நிறுவனம் ஒன்றுக்கு சுமார் மூன்று மில்லியன் பவுண்ஸை இலங்கை அரசாங்கம் செலுத்துவதாக பி.பி.சி. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)



வவுனியாவில் நேற்று விடுவிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகள் பெற்றோருடன் வீடு திரும்பும்போது...

# முன்னாள் புலிப் போராளிகள் 306 பேர் வவுனியாவில் வைத்து நேற்று விடுவிப்பு

(வவுனியா)

புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வு பயிற்சியளிக்கப்பட்ட மேலும் ஒரு தொகுதி முன்னாள் விடுதலைப்புலி போராளிகள் 306 பேர் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆரம்ப பிரிவு பாடசாலை மண்டபத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வைபவத்தில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர, பிரதி அமைச்சர் விஜிதமுனி டி சொய்சா, அமைச்சின் செயலாளர் ஏ.திஸநாயக்க, அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எம்.எஸ்.சதீஸ்குமார், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க ஆகியோருடன் பல முக்கிய இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

விடுதலை செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளை, பெற்றோரிடம் கையளிக்கும் வைபவத்தில் உரையாற்றிய அமைச்சர் குணசேகர, கிளர்ச்சியில் முன்னர் ஈடுபட்டு பின்னர் தமது கிளர்ச்சி நடவடிக்கைகளை கைவிட்டு சமூகத்துடன் இணைந்த ஜே.வி.பியினர் ஜனநாயக நீரோட்டத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## வெடிபொருளுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வெடிபொருட்களை வைத்திருந்த இருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இரண்டு கிலோக்கிராமிற்கு அதிகமான சக்தி வாய்ந்த வெடிபொருட்களை குறித்த இருவரும் வைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

80 மில்லிமீற்றர் மோட்டார் செல் ஒன்றில் பயன்படுத்தப்படும் வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. என்ன காரணத்திற்காக இவர்கள் குறித்த வெடிபொருட்களை வைத்திருந்தார்கள் என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ந-5)

## ஐ.தே.கட்சியிலிருந்து பலர் அரசாங்கப் பக்கம் தாவலாம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் உள்ளிட்ட இன்னும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத் தரப்புடன் இணைந்து கொள்வது சம்பந்தமாக தற்போதைக்கு ஜனாதிபதியுடன் இரகசிய பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஜனாதிபதியின் இரண்டாம் தவணைக்கான பதவிபிரமாண நிகழ்வுகளுடன் இணைந்ததாக அவர்களின் கட்சித்தாவல் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

18ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர் (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் ஒரு இலட்சம் பேர் மீள்குடியமர்த்தப்பட உள்ளனர்

### பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதியில் இடம்பெயர்ந்த சுமார் ஒரு இலட்சத்துக்கும மேற்பட்ட மக்கள் இன்னும் குடியேற்றப்படவுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கிரான் பிரதேசத்துக்குட்பட்ட திகிலிவட்டை பகுதியில் விவசாயிகளுக்கு விவசாய கடன் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீனவர்கள் இருபது பேர் கைது

(சென்னை)

சட்டவிரோதமாக மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் இருபது பேரை இந்திய ஆந்திர மாநிலத்தில் கடலோர காவல் படையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த இருபது மீனவர்கள் நான்கு படகுகளில் ஆந்திரமாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள வங்களா விரிகுடா கடல் பகுதியில் சட்டவிரோதமாக மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

விமானத்தில் இருந்தபடி அதை கண்காணித்த (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை செல்வது குறித்து ஆராய்கின்றோம் ஐ.நா.செயலாளரின் ஆலோசனைக் குழு அறிவிப்பு

(நியூயோர்க்)

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் பான் கீ மூன் அமைத்துள்ள ஆலோசனைக் குழுவினர் இலங்கைக்கு தமது பிரதிநிதிகளை அனுப்புவது தொடர்பில்ஆராய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஐ.நாவின் ஊடக அமைப்பான இன்னர் சிற்றி பிரஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐ.நா.செயலாளர் அமைத்துள்ள ஆலோசனைக்குழு சாட்சியங்களை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளபோதும் அதன் செயற்பாடுகளை வெளிப்படையாகக் காண முடியவில்லை.

எனினும் நேற்றுமுன்தினம் ஐ.நா.அலுவலகத்தில் இடம்பெற்ற வடகொரியா தொடர்பான ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் ஆலோசனைக் குழுவின் தலைவர் மார்சூகி தருஸ்மன் பங்குபற்றியிருந்தார்.

இதன் போது இலங்கைக்கு எமது பிரதிநிதிகளை அனுப்புவது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம் (20ஆம் பக்கம் பார்க்க)

# சொந்த இடத்திலேயே குடியேறுவோம்; சம்பூர் மக்கள் சிவாஜிலிங்கத்திடம் முறையீடு

(திருகோணமலை)

சொந்த இங்களில் மட்டுமே மீள் குடியேறுவோம் என இடம்பெயர்ந்து தற்போது முகாம்களிலுள்ள சம்பூர்மக்கள் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சிவாஜிலிங்கத்திடம் முறையிட்டுள்ளனர்.

திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில் 10 ஆயிரம் ஏக்கர் பகுதி உயர் பாதுகாப்பு வலயம் என இராணுவம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் அப்பகுதியிருந்து கடந்த 2006ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த சுமார் 6ஆயிரம் மக்களில் கட்டைப்பறிச்சானில் 390 குடும்பங்களும் கிளிவெட்டியில் 570 குடும்பங்களும் மணற்சேனையில் 72 குடும்பங்களும் பட்டித்திடலில் 273 குடும்பங்களும் முகாம்களில் வசித்து வருகின்றனர்.

இம் மக்களை நேற்று நேரில் சென்று பார்வையிட்ட தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும் யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் அது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்.

முகாம்களில் வசித்து வரும் சம்பூர் மக்களை அரசாங்கம் வேறு இடங்களில் காணிகள் வழங்கி குடியமர்த்த நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எனினும் அம் மக்கள் சம்பூரிலேயே குடியமர்வோம் வேறு எங்கேயும் நாம் செல்லமாட்டோம் என உறுதியாகவுள்ளனர்.

திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவை இராணுவம் உயர்பாதுகாப்பு வலயமாக அறிவித்துள்ளது.

இவ் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் ஆயிரத்து 700 ஏக்கர் பரப்பளவில் இந்திய அரசின் உதவியுடன் அனல் மின்நிலையம் அமைக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட பிரதேசத்தில் அனல்மின் நிலையம் அமைப்பதை தாம் தடுக்கவில்லை எனவும் ஏனைய பிரதேசத்தைத் தம்மிடம் வழங்குமாறும் மக்கள் கோருகின்றனர்.

அத்துடன் உயர்பாதுகாப்பு பிரதேசத்தில் இராணுவ குடியிருப்புகள் அமைக்கப்படுவதாக தமக்கு தெரிய வந்துள்ளதாகவும் மக்கள் என்னிடம் தெரிவித்தனர்.

எனவே சம்பூர்மக்கள் இணைந்து ஜனநாயக வழிப்போராட்டத்தை ஆரம்பித்தால் பூரண ஆதரவு வழங்கத்தயார் என நான் அவர்களிடம் உறுதியளித்துள்ளேன்.

இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ந-5)

# முன்னாள் அமைச்சர் தர்மதாஸ காலமானார்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் தர்மதாஸ பண்டா நேற்று காலமானார்.

மொனராகலை மாவட்ட ஐ.தே.க.முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக தர்மதாஸ பண்டா 2007 ஆம் ஆண்டில் ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்தில் இணைந்து கொண்டார். இறுதியாக அவர் மேலதிக பயிர்ச் செய்கை அமைச்சராக பதவி வகித்தார்.

72 வயதான அவர் நேற்று மாலை காலமானார். (ந-5)

# ஊடகவியலாளருக்கு மணிவிழா

(யாழ்ப்பாணம்)

மூத்த ஊடகவியலாளரும் எழுத்தாளரும் கலை இலக்கியவாதியுமான கலைச்சுடர் என்.இராமச்சந்திராவின் 60வது அகவை நிறைவை முன்னிட்டு மணிவிழாவினை நடத்த விழாக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனை ஒட்டி மணிவிழாமலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. தமிழ்நாடு சமயநிறுவனங்களின் அழைப்பில் அண்மையில் தமிழ்நாட்டிற்கு சென்றுவந்த இவரது சிறப்புப் பேட்டி டான் ரீவியில் நாளை திங்கட் கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறவுள்ளது. (ந)

# ஆமை வெட்டிய மாணவர்கள் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு துறைநீலாவனை வாவிக்கரையில் சட்டவிரோதமான முறையில் ஆமைகளை வெட்டிய பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.ஆர்.மானவடு தெரிவித்தார்.

நேற்று மாலை 6.00 மணியளவில் இவர்கள் 10 ஆமைகளை வெட்டி அதன் இறைச்சியினை எடுத்துச் சென்ற போதே பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களுள் ஒருவர் மொறட்டுவ பல்கலைக்கழகத்தையும், மற்றவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தையும்சேர்ந்த மாணவர்கள் என பொலிஸார் தெரி வித்தனர்.

இவர்கள் இருவரும் இன்று மட்டக்களப்பு நீதவான் நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொறுப்பதிகாரி மானவடு குறிப்பிட்டார். (ந-5)

# அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் அமைச்சுப் பதவி பறிக்கப்படலாம்

## கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பரில் இடம்பெறவுள்ள அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் அமைச்சுப் பதவியில் மாற்றம் ஏற்படவோ அல்லது அவரது பொறுப்பிலிருந்து மகாவலி அமைச்சுப் பொறுப்பு நீடிக்கப்படவோ கூடும் என ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியின் கடைசிக் கட்டத்தில் அவரது புதல்வர் விமுக்தியை அரசியலுக்குக் கொண்டுவரும் நோக்கில் அமைச்சர் நிமல், மிருகவதைக்கு எதிரான அமைப்பு ஒன்றை உருவாக்கி அதன் தலைவராக விமுக்தியை முன்னிறுத்தி செயற்பட்டமை காரணமாக ஆரம்பம் முதலே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர் மீது அதிருப்தியுடன் இருந்தார்.

அதன் காரணமாகவே கடந்த காலங்களில் அவரது அமைச்சின் மீதான விமர்சனங்களைக் கண்டும் காணாது போல ஜனாதிபதி செயற்பட்டதுடன் அவற்றை ஊக்குவிக்கும் நடவடிக்கையையும் மேற் கொண்டார்.

தற்போது அவருக்கு எதிரான காய் நகர்த்தலுக்குத்தக்க தருணம் என்று கருதும் ஜனாதிபதி அடுத்த நவம்பரில் நடைபெறவிருக்கும் அமைச்சரவை மாற்றத்தின் போது நிமல் சிறிபாலடி சில்வாவுக்கு முக்கியத்துவமற்ற அமைச்சுப் பொறுப்பொன்றைக் கொடுத்து ஓரங்கட்ட முயற்சிக்கிறார். அல்லது தற்போது வகிக்கும் அமைச்சுப் பொறுப்புத் தான் வேண்டும் என்று அவர் அடம் பிடித்தாலும் மகாவலி அபிவிருத்தி அவரது பொறுப்பிலிரு ந்து நீக்கப்பட்டுவிடுமாம்.

அதேநேரம் நவம்பரில் இடம்பெறும் அமைச்சரவை மாற்றத்தின் போது ஐ.தே.கவிலிருந்து அரசுக்குத் தாவிய நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரத்னவுக்கு பொறுப்பு வாய்ந்த அமைச்சர் பதவியொன்றை அளிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகத்தகவல்களிலிருந்து மேலும் தெரியவந்துள்ளது,

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான முதலாவது இராணுவ நீதிமன்றில் லக்ஷ்மன் செனவிரட்ன அளித்த சாட்சியமே பொன்சேகாவின் பட்டம், நட்சத்திரம், ஓய்வூதியம் என அனைத்தையும் ரத்தாக்குவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது.

அதற்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையிலேயே அவருக்கு முக்கியமான அமைச்சுப் பொறுப்பொன்றை வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக குறித்த தகவல் மேலும் சுட்டிக்காட்டுகின்றது. (ந-5)


# தேவை

எமது நிறுவனத்திற்கு முகாமையாளர் 10 பேர் தேவை. பயிற்றப்பட்டு தெரிவு செய்யப்படுவர். காலம் 4 மாதம். பயிற்சியின் போது சிறிய கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சி இலவசம். தங்குமிட வசதி இலவசம் ஆண்கள் மட்டும். (வயது 17-25).

Contact: Miss Banu, 0725614307

(மூன்று மொழிகளும் இலவசமாகக் கற்பிக்கப்படும்)

(1456)

தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777

(சி/1384)

# சித்தா மருத்துவம்

வாதம், பாரிசவாதம், அழல் வாதம், நீரிழிவு, சிறுநீரக அழற்சி, சூதகவலி, பாலியல் குறைபாடு, வெள்ளைபடுதல், அதி இரத்த அமுக்கம், நெஞ்சுக்குத்து, நரம்புத் தளர்ச்சி, உடற் பருமன், மெலிவு, சோரியாசிஸ், கிரந்தி, கரப்பன், கணை குறோகோமா, இள நரை, பொடுகு முதலான நோய்களுக்கு பேரறிஞர் டாக்டர் கே.பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர் அவர்களை 25ம் 26ம் 27 ஆம் திகதிகளில் சுன்னாகத்தில் சந்திக்கலாம்.

தொலைபேசி தொடர்பு:
0777 047371
0757390195, 0771005971

டாக்டர் கே.சிவானந்தன்
வங்கி ஒழுங்கை,
சுன்னாகம், தெற்கு சுன்னாகம்.

(2726)

செல்லா சினிமா




காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00


# விற்பனை முகவர்கள் தேவை

பல்பொருள் விற்பனைத் தாபனத்துக்கு விற்பனை முகவர்கள் 5 பேர் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

நியூ ஸ்ரீ திருப்பதி றேடர்ஸ்
151, கே.கே.எஸ் வீதி,
சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P :- 0773366482

(சி/1449)


# காணவில்லை



**சுந்தர் ஜெயபராபரன் (தெய்வம்)**

கடந்த 16.10.2010 சனிக்கிழமை அன்று கொழும்புக்கு லொறிச் சாரதியாகச் சென்ற இவர், இன்று வரை வீடு திரும்பவில்லை. இவரிடமிருந்து எதுவித தொடர்புகளும் இல்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு :-
க.சுப்பிரமணியம் (அண்ணா)
வீரான் தோட்டம், உடுவில் வடக்கு.
தொ.பே: 0777959273 (2724)

தகவல்
மனைவி ஜெ.இந்திராணி
வரணி இயற்றாலை,
வரணி.
தொ.பே: 0775925480

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜேஸ்வரி சிறீராஜபுலேந்திரன்



கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் யாழ்.கொட்டடி சிவன் பண்ணை வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சிறீராஜபுலேந்திரன் அவர்கள் கடந்த 21.10.2010 வியாழன் இரவு காலமானார்.

அன்னார் யாழ்ப்பாணம் சரவணா அச்சக உரிமையாளர் சிறீராஜபுலேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் நிரூபன், சாரூபன் (உரிமையாளர் பூஜா மொபைல்ஸ்-வெள்ளவத்தை, கொழும்பு), நீரஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் மனோரஞ்சினி, ஒபேசன் (கட்டிட மேற்பார்வையாளர்) ஆகியோரின் மாமியாரும் இராஜேஸ்வரன் (லண்டன்), இராஜகோபால் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்), இராசலிங்கம்(சுவிஸ்), இராஜரத்தினம்(காணி நிர்வாக திணைக்களம், வட மாகாணம்) இராஜசுலோசனா ஆகியோரின் சகோதரியுமாவார்.

இறுதிக் கிரியைகள் 22.10.2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் யாழ்ப்பாணம் வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**29, சிவன்பண்ணை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-1457)

தகவல்:
சாரூபன் (மகன்)
0773706506, 0778760905


Cargills
MAGIC
சுவைகள் நிறைந்த மெஜிக் உலகம்
மஜிக் ஐஸ் கிறீமைச் சுவையுங்கள்
பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லுங்கள்
3 தங்க நாணயங்கள்
மாபெரும் பரிசு
1 ஹொண்டா ஸ்பிளெண்டர் மோட்டார் சைக்கிள்
20 சாறிகள்
50 சைக்கிள்கள்
2010 நவம்பர் 15 வரை
பரிசு பெறுபவர்களின் பெயர்ப்பட்டியல் விற்பனை மேம்படுத்தல் முடிவு திகதியின் பின் அறிவிக்கப்படும்.
ஆறுதல் பரிசுகள்-200 குடைகள்
Halaal - Sri Lanka

# வன்செயலால் பாதிக்கப்பட்ட யாழ். மக்களுக்கு நிவாரணநிதி

(யாழ்ப்பாணம்)

கடந்தகால வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட ஒருதொகுதி மக்களுக்கு நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் வைத்து நிவாரண நிதி வழங்கப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோளின் பேரில் , அமைச்சர் டியூ குணசேகரவின் ஏற்பாட்டில் இந்நிகழ்வுகள் இடம் பெற்றன.

நேற்று முன்தினம் காலை யாழ். செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா , டியூ குணசேகர மற்றும் தினேஷ் குணவர்த்தன, பிரதி அமைச்சர் விஜித முனி டி சொய்சா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டின், உதயன் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள் ஆகியோருடன் பாதிக்கப்பட்ட பொதுமக்களில் ஒரு தொகுதியினரும் பங்கு கொண்டனர்.

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த கால வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மேற்படி ஒரு தொகுதி மக்களுக்கு நிவாரண நிதிக்கான காசோலைகளை வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## கும்பாபிஷேகம்

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயில் என்று அழைக்கப்படும் திருவருள் மிகு வள்ளிதேவ சேனா சமேத பாலசுப்பிரமணிய ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதற்கு முன்னோடியாக எண்ணெய்க் காப்பு சாற்றும் வைபவம் இன்று காலை 10 மணி தொடக்கம் நாளை மாலை 6.00 மணிவரை நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-26)

## பொதுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க விசேட பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை அதிபர் இ. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வயது வேறுபாடில்லாமல் இப்பாடசாலையின் சகல பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-84)

# ஆனையிறவு உப்பளத்தில் பணியாற்றிய ஐம்பது ஊழியர்களுக்கு கொடுப்பனவு

இலங்கை உப்பு கம்பனி லிமிட்டெட்டின் ஆனையிறவு வட பிராந்திய காரியாலயத்தில் பணியாற்றிய முன்னாள் ஊழியர்களுக்கு தொழில் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ள சம்பள நிலுவை மற்றும் சட்ட ரீதியான கொடுப்பனவுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவிலும் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் தொழில் திணைக்களத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளன. பெயர்கள் அறிவிக்கப்பட்ட 50 ஊழியர்களுக்கு மட்டுமே இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதுடன் மிகுதி ஊழியர்களுக்கு கட்டம் கட்டமாக கொடுப்பனவுகள் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்தோடு இந்தக் கொடுப்பனவுகளை வவுனியா அல்லது யாழ்ப்பாணம் சென்று பெறுவதற்கு தங்களால் முடியுமா என்பதை அறியத்தருமாறு இலங்கை வர்த்தக கைத்தொழில், பொதுத் தொழிலாளர் சங்கத்தின் (சி.எம்.யு) முன்னாள் இலங்கை உப்புக் கம்பனிக் கிளையின் செயலாளர் வே. சுந்தரலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை சி.எம்.யு சங்கத்தில் யாரேனும் முன்னாள் உறுப்பினர்களின் நெருங்கிய உறவினர்கள் இருப்பின் , அவ்வாறான உறுப்பினர்களின் சட்ட பூர்வ வாரிசுகட்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்காக அவர்களது தற்போதைய முகவரிகளையும் அறியத் தருமாறு அவர் கேட்டுக்கொள்கின்றார். (ஸ்ரீ-2)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மக்கள் நலன்புரி மன்றம் நடத்தும் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் சுன்னாக மக்கள் நலன்புரி மன்றத் தலைவர் சிறில் சுகந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் வரவேற்புரையை இணைத் தலைவர் நா. நவரத்தினம் நிகழ்த்த ஆசியுரையை சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை அருட்பணி ம.றெக்ஸ் சவுந்தரா அடிகள் மற்றும் சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான சிவ ஸ்ரீ.நா. சர்வேஸ்வரக்குருக்கள் ஆகியோர் ஆற்றுவர்.

வாழ்த்துரைகளை யாழ். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி உப-அதிபர் அருட்பணி அ.றொபின்சன் யோசெப் அடிகள், சுன்னாகம் மக்கள் நலன்புரி மன்ற ஆலோசகர் ஐ.மனோகரன், சுன்னாகம் மக்கள் நலன்புரி மன்ற சிரேஷ்ட பிரிவு மாணவன் செல்வன் பத்மநாதன் விகிர்தனன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ-2)

## இராசி பலன்

24.10.2010
(ஐப்பசி 7, ஞாயிற்றுக்கிழமை)
பிரதமை முற்பகல் 8.50 மணிவரை
பரணி பின்னிரவு 12.38 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
ஐப்பசிப் பரணி

**மேடம்** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீரென மாற்றம் செய்வீர்கள், வேலைப்பழு கூடும், சிந்தனை மிகுதியாக காணப்படும்.

**இடபம்** குல தெய்வ வழிபாட்டில் கூடிய அக்கறை செலுத்துவீர்கள், பிரியமான சிலருக்காக பெரும் தொகையொன்றைச் செலவிடும் சூழ்நிலை அமையும்.

**மிதுனம்** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்தி வந்து சேரும், விலையுயர்ந்த பொருட்கள் வீடுவந்து சேரலாம், பணவரவு எதிர்பார்த்தபடியே கிடைக்கும்.

**கடகம்** கண்ணியமான ஒருவரின் சந்திப்பு கிடைக்கும், தலைமைப் பொறுப்புகள் தானே தேடி வரும், சொத்து வாங்குவதற்கு திட்டம் தீட்டுவீர்கள், பயணத்தால் பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், மறைமுக எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும்.

**கன்னி** கவலைகள் தீர கதிரவனை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கூடிய கவனமெடுக்கும் சூழ்நிலை அமையும்.

**துலாம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், எதிரிகள் விலகுவர், தடைப்பட்ட காரியம் கைகூடும், எதிரிகள் உதிரியாகும் நாள், ஆரோக்கியம் சீராகும், விருந்துபசாரமுண்டு.

**தனுசு** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்தி சாதுரியமாக செயற்பட்டு வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

**மகரம்** இயல்பான வாழ்க்கையில் இனிமை சேரும் நாள், வர வேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், விருந்து விழாக்களில் கலந்து கொள்ளும் சூழ்நிலை அமையும்.

**கும்பம்** பொன்னான நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர்.

**மீனம்** பாராட்டும், புகழும் அதிகரிக்கும், பொதுநல ஈடுபாட்டில் அதிக ஆர்வம் ஏற்படும், பணப் புழக்கம் அதிகரிக்கும், அதிகாரிகள் வெறுக்க நேரிடலாம்.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## நட்புக்கவலை

டாக்டர், இவன் என்னுடைய சிநேகிதன். இரண்டு பேரும் ஒரே அறையில் தான் தங்கிப் படிக்கிறோம். இவனை நினைத்தால் எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது.

"என்ன விடயம்?"

"தலைமுடியை வாயில் வைத்து சாப்பிடுகிறான் டாக்டர். அது என்னமோ அப்படி ஒரு சுவை அவனுக்கு."

"இதுபோல் உலகத்தில் பலர் உண்டு. அதனால் இதுவொன்றும் பெரிய ஆச்சரியமில்லை"

"அப்படியா?"

"ஆமாம். இதைப்பற்றி சிலர் ஆய்வு செய்திருக்கிறார்கள். முடியைச் சாப்பிடும் பழக்கம் பலருக்கு இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள்"

"அதற்கு என்ன காரணமாக இருக்கும்?"

"அது ஒரு மனோவியாதியாம். மனதிலுள்ள கோளாறு அது. இருந்தாலும் வயிற்றுக்குள் இடையூறு கொடுக்கும்"

"எப்படி"

"சாப்பிடும் முடியெல்லாம் வயிற்றுக்குள் போகும். அங்கு அது ஜீரணமாகாது. ஒன்றாகத் திரண்டு உருண்டு கட்டியாகிவிடும். அதன் பின் இடைஞ்சல் கொடுக்கும்"

"அப்படியானால் எப்படி அதை வெளியே கொண்டு வருவது?"

"சத்திரசிகிச்சை செய்துதான் வெளியே எடுக்க வேண்டும்."

"இவன் கூட அடிக்கடி வயிறு வலிக்குது என்று வயிற்றைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விடுகிறான். இவனை உடனடியாக கவனியுங்கள். எனக்கு மிகவும் அவஸ்தையாக இருக்கிறது டாக்டர். இரவு முழுவதும் தூக்கமில்லை"

"இவருடைய வயிறு தானே வலிக்கிறது. உங்களுக்கு என்ன அவஸ்தை?"

"இவனுடைய வயிற்றுக்குள் இருப்பது முழுவதும் என்னுடைய தலைமுடி டாக்டர்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 90 |
| தக்காளி | 100 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 |
| கோவா | 80 | 70 | 60 |
| கரட் | 80 | 60 | 60 |
| பூசணி | 50 | 40 | 30 |
| புடோல் | 80 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 150 | 150 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 50 |
| கரணைக்கிழங்கு | 70 | 50 | 60 |
| பயிற்றங்காய் | 120 | 100 | 90 |
| லீக்ஸ் | 140 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 40 | 40 |
| கறிமிளகாய் | 140 | 20 | 70 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 150 |
| போஞ்சி | 150 | 120 | 120 |
| கத்தரி தம்புள்ள | 90 | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 25 |
| தேசிக்காய் | 120 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |

# மன்னார் தமிழ்ச் செம்மொழி விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று

(யாய்ப்பாணம்)

மன்னார் தமிழ் செம்மொழி விழாவின் மூன்றாம் நாள் **இலக்கிய விழா II** இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒருமணிவரை மன்னார் நகர மண்டபத்தில் செபஸ்ரியான் குரூஸ் அண்ணாவியார் அரங்கில் மன்னார் தமிழ் சங்க நிதிச் செயலாளர் தோமஸ் மரியதாஸ் , தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மன்னார் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.சிவலிங்கம் , சிறப்பு விருந்தினர்களாக , மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரபாகர மூர்த்தி , மன்னார் மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் செல்வி முருகேசு சிவகுமாரி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக , நானாட்டான் சிறுவர் இலக்கியப் படைப்பாளி பி.பி. அந்தோனிப்பிள்ளை மற்றும் யப்பான் டோக்கியோ பல்கலைக் கழக கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகி யோர் சிறப்பிக்க வுள்ளனர்.

இன்றைய நாளின் காலை நிகழ்வாக விருந்தினர் மதிப்பளிப்பு வைபவம் நடை பெறும்.

வரவேற்புரையை மன்னார் திருமறைக் கலாமன்ற இணைப்பாளர் ஐ.சி.ஏ. ஜோண் பொஸ்கோ நிகழ்த்துவார். இவ் இலக்கிய விழாவில் மாணவரின் பேச்சு ,கவியரங்கம் , நினைவுச்சின்னம் வழங்குதல் ,சிறப்புரைகள் , குழுநடனமாகியவை இடம் பெறவுள்ளது.

இலக்கியவிழா IIமாலை அமர்வின் *நாடக விழா* மாலை 3 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை மன்னார் நகர மண்டபத்தில் முகம்மது காசிம் புலவர் அரங்கில் மன். தமிழ்ச் சங்க நிர்வாக உறுப்பினர் அருட்திரு ஜெறோம் லெம்பேட் அடிகளார் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக மடு. வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்ரியன்,சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகரசபை செய லாளர் திருமதி ஆர். பெர்னடெற் குரூஸ் மற்றும் இடம் பெயர்ந்த மன்னார் பாடசாலை களின் இணைப்பா ளர் ஜனாப் எஸ்.ஏ. ஹினா யத் துல்லா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள் ளனர்.

கௌரவ விருந்தினர்களாக, யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில மொழி கற்பித்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் தலைவருமான கலாநிதி கந்தையா சிறிகணே சன் மற்றும் முருங்கன் நாட்டுக் கூத்துக் கலை ஞரும் இளைப்பாறிய அதிபருமான கலாபூ சணம் க்லைஞர் குழந்தை ஆகியோர் கலந்து கொள்வர்.

விழா தொடக்கத்தில் விருந்தினர் மதிப் பளிக்கப்பட்டு வரவேற்புரையினை கலைஞர் என். எல். பாலச்சந்திரன் நிகழ்த்துவார்.

வரவேற்பு நடனத்தை மன்.புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை மாணவிகள் மேடையேற்றுவர். நிகழ்வின் ஆசியுரையை மன்.மூர்வீதி பள்ளிவாசல் மௌலபி எஸ்.ஏ.அஸீம் பேஸ் இமாம் நிகழ்த்துவார்.

அத்துடன் சிறுவர் நாடகம் , இசை நாடகம் , நவீன நாடகம் , இலக்கிய நாடகம் , கூத்து நாடகம் என்பன அன்றைய அமர்வின் போது இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## பெற்றோல் தட்டுப்பாடு: பாவனையாளர்கள் விசனம்

(நவாலி)

மானிப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அடிக்கடி பெற்றோல் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனால் பாவனையாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை கள்ளச்சந்தையில் 130 ரூபா முதல் 140 ரூபா வரை பெற்றோல் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-26)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு பூசை முடிவுற்றதும் செஞ்சொற் செம்மல் இரா. கேதீசன் *பெறுவதற்கு அரிய பிறவி* என்னும் விடயம் பற்றி ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-35)

## இலங்கைத் தமிழர்கள் மோதல் இருவர் காயம்; 11 பேர் கைது

சுவிட்சர்லாந்தின் பேர்ண் நகரத்தில் உள்ள உணவகம் ஒன்றில் இலங்கைத் தமி ழர்கள் ஒரு பகுதியினரிடையே இடம்பெற்ற பரஸ்பர மோதலில் இருவர் காயம் அடைந் துள்ளார்கள். இதைத் தொடர்ந்து வன்முறைகளில் ஈடுபட்டனர். என்கிற குற்றச்சாட்டின் பேரில் அங்கிருந்த இலங்கைத் தமிழர்கள் பதினொரு பேரை பேர்ண் நகரப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி மாலை இடம்பெற்ற இம் மோதலில் உணவகத்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. ஆரம்ப மோதலின் போதே உண வக உரிமையாளர் பொலிஸாருக்குத் தக வல் வழங்கினார்.

பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்த போது; தமிழர் ஒருவர் காயமடைந்திருந்தார் பின் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஒரு தமிழரைக் கைது செய்து கொண்டு சென்றனர்.

ஆனால் சில மணி நேரங்களில் அங்கு மோதல் தொடர்ந்த பின் உக்கிரம் அடைந் தது மீண்டும் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் வந்து பார்த்த போது இன்னொரு தமிழர் காயமடைந்திருந் தார். சண்டை முற்றி இருந்தது. கார்சாரமான வாய்த் தர்க்கமும் இடம்பெற்றுக்கொண்டிருந் தது.

பொலிஸார் அங்கிருந்த பத்துத் தமிழர் களை கைது செய்து கொண்டு போனார்கள் மோதலின் பின்னணி என்ன? என்பது குறித் துப் பொலிஸார் புலனாய்வு விசாரணை முடுக்கி விட்டுள்ளனர். பொலிஸார் சம்பவத்தை நேரில் கண்டவர்களின் உதவி ஒத்தாசைகளை விசாரணைக்காக கோரி உள்ளார்கள். (ஸ்ரீ-2)

## ஐ.நாவுக்கு தகவல்கள் வழங்கியோர் குறித்து இராணுவ புலனாய்வு பிரிவினர் விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு போலியான தகவல்களை வழங்கிய நபர்கள் தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.வடக்கைச் சேர்ந்த 13 பேர் இராணுவத்திற்கு எதிரான போலியான தகவல்களை திரட்டி சர்வதேச தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கி வரும் நிறுவனமொன்றின் சார்பில் வடக்கு மக்களிடம் போலியான சாட்சியங்களைத் திரட்டி குறித்த நபர்கள் சர்வ தேச தொண்டு நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியதாக மன்னார், வவுனியா போன்ற பிரதேசங்களில் உள்ள மக்களிடம் தகவல்களை திரட்டி அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொழும்புக் கிளையில் இந்தத் தகவல் கள் காணப்படுவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## நூற்றாண்டுவிழா

(நல்லூர்)

புத்தூர் வாதரவத்தை சிறீவிக்னேஸ்வரா பாடசாலையின் நூற்றாண்டுவிழா நாளை திங்கட்கிழமை பி.ப.2 மணிக்கு பாடசாலை மண்டத்தில் பாடசாலை அதிபர் எஸ். தவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர் களாக யாழ். மாவட்ட மேலதிக கல்விப்பணிப்பாளர் வே. தி.செல்வரத்தினம்,யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், மக்கள் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் த.இராசலிங்கம், மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் கு.பிரபாகரமூர்த்தி ஆகியோரும் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதி நிகழ்வாக பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ-134)

## எரிகாயங்களுக்கு இலக்காகி குடும்பப் பெண் படுகாயம்

அடுப்புக்குள் மண்ணெண்ணெய் ஊற்றிய வேளை தவறுதலாக சட்டையில் தீப் பற்றிக் கொண்டதில் உடல் முழுவதும் பலத்த எரிகாயங்களுக்குள்ளான குடும்பப் பெண்ணொருவர் மந்திகை ஆதார வைத் திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் அண்மையில் இடம்பெற் றது. இச்சம்பவத்தில் உடுப்பிட்டி பொக்கணை சந்தியை சேர்ந்த சிறீராம் அகிலாம்மா (வயது 40) என்ற பெண்ணே பாதிப்புக்குள்ளானவர் ஆவார். (ஸ்ரீ-24)

## கண்ணீர் அஞ்சலி




### அமரர் அருணாசலம் சோமசுந்தரம்

யாழ். மாநகர முதல்வரின் தந்தையாரின் மரணச் செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.முச்சக்கரவண்டி சேவைச்சங்கம்,
முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.

(2727)

## விவாக சோபன நல் வாழ்த்துக்கள்



நாதலிசை நல்கும் நாயகன்
நம்பி அருள் முகுந்தன்
காதலினால் சத்திய பிரியா
கரம் சேர்ந்தான் கண்டோம்
ஆதலினால் நல்வாழ்த் திசைத்தோம்
ஆயபல் புகழ்சேர்க வின்னும்
பூதலம் தொறும் புக ழிசைமேவி
பொற்புறு தம்பதி வாழிய!

இன்று மங்கல விவாக சோபன வைபவத்தில் இணையும் நம் அன்புக்குரிய நாதஸ்வர கலைஞர் அருள்முகுந்தன் சத்தியபிரியா தம்பதியினரை வாழ்த்தி எம் ஆசீர்வாதங்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

சிவஸ்ரீ கு.தியாகராஜக்குருக்கள்
நீர்வை செல்லக்கதிர்காமசுவாமி தேவஸ்தானம்,
நீர்வேலி.

(2725)

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் எட்வேட் அமிர்தசிங்கம் (அமுதம்)

நீ பெறுவாய் முத்துமாரி நிழலிற் சாந்தி

மலர்வு 13 . 04 . 1933



உதிர்வு 05 . 11 . 2009

திதி 25.10.2010

உத்தமனாய் வேலணையில் உதித்தே வாழ்வில்
உளுற்றிவரு பணிகளினால் உயர்ந்தும் பாரில்
சித்தமதேர் மக்களினைச் சிறப்பாய் பெற்றும்
சீருடைய நிறை வாழ்வில் திழைத்தும் உற்ற
புத்திரனார் மடியதினில் பூரிப்போடு
புண்ணியனாய் புவிவாழ்வை திறந்தும் மீளா
நித்திரை சேர்ந்த தோராண்டு நிறைந்த போதும்
நீ பெறுவாய் முத்துமாரி நிழலிற் சாந்தி

தகவல்
அ. சசிகுமார்
(ராயன் ஏஜன்சி, கொழும்பு)
வேலணை கிழக்கு, வேலணை-03.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி-1453)


# 'லப்டொப்' அபாயம்!

இன்று 'லப்டொப்'' எனப்படும் 'மடிக்கணனி'யைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நீங்கள் நீண்டநேரம் 'லப்டொப்'பை மடியில் வைத்துப் பயன்படுத்துபவரா? அப்படியானால் நீங்கள் உடனே அந்தப் பழக்கத்தை மாற்றிக்கொள்வது அவசியம்.

தொடர்ந்து 'லப்டொப்'பை மடியில் வைத்து உபயோகிப்பது, ''டோஸ்டட் ஸ்கின் சிண்ட்ரோம்' என்ற தோல் பாதிப்பை ஏற்படுத்தும் என்கிறார்கள் ஆய்வாளர்கள். 'லப்டொப்' சூடாகும் அளவுக்கு மடியில் வைத்து உபயோகிப்பதால் தோல் நிறமாற்றம் ஏற்படும் என்கிறார்கள்.

வெளிநாட்டில் ஒரு 12 வயது சிறுவன் பல மாதங்கள் தினசரி சிலமணி நேரத்துக்கு மடியில் 'லப்டொப்' வைத்து 'வீடியோ கேம்ஸ்' விளையாடி வந்தான். இந்நிலையில், அவனது இடது தொடையில் 'ஸ்பாஞ்ச்' போன்ற வகையில் நிறமாற்றம் ஏற்பட்டது.

''அந்த சிறுவன் 'லப்டொப்'பைப் பயன்படுத்தும்போது உஷ்ணத்தை உணர்ந்திருக்கிறான். ஆனாலும் லப்டொப்பை மடியின் மீதே வைத்துத் தொடர்ந்து விளையாடி வந்திருக்கிறான். அதன் விளைவாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது'' என்று சுவிற்ஸர்லாந்து ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



அமெரிக்கா விர்ஜினியாவைச்சேர்ந்த சட்டக் கல்லூரி மாணவி ஒருவருக்கும் இதே மாதிரி யான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர் தினமும் 6மணிநேரம் மடிக்கணனியைப் பயன்படுத்தியிருக்கிறார். அவருக்கு 125 டிகிரி அளவுக்கு வெப்ப பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

'லப்டொப்' பயன்படுத்துவோரே... உஷார்!




# பப்புவா நியூகினியா தீவில் புதிய உயிரினங்கள்!

பசுபிக பெருங்கடலில் அமைந்துள்ள பப்புவா நியூகினியா தீவில் 200க்கும் மேற்பட்ட புதிய தாவர, விலங்கினங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இவற்றில் வெள்ளை வால் எலி, நீண்ட மூக்குக் கொண்ட தவளை போன்ற விந்தை உயிரினங்களும் அடக்கம்.

இந்தப் பாலூட்டிகள், இருவாழ்விகள், பூச்சிகள், தாவரங்கள் இதுவரை உலகம் அறியாதவை.



இதுபற்றி ஆய்வாளர் ஸ்டீவ் ரிச்சர்ட்ஸ் கூறும்போது,'' இன்று, முற்றிலும் புது வகையான பாலூட்டிகளைக் கண்டுபிடித்திருப்பது மிகவும் அதிசயமானது. மரம் ஏறும் கங்காரு போன்ற உயிரினங்கள் பற்றி மக்கள் கேள்விப்பட்டிருப்பார்கள். ஆனால் இதுமாதிரியான விந்தையான சின்னச்சின்ன உயிரினங்களைக் காணும்போது நமது ஆச்சரியம் கூடுகிறது'' என்கிறார்.

இன்று உலகில் எஞ்சியிருக்கும் இரண்டு செழுமையான மழைக்காடுகளான அமேசன், கொங்கோ வடிநிலப்பகுதி ஆகியவற்றுக்கு இணையானது பப்புவா நியூகினியா மழைக்காடு.

'' பல்லுயிரினங்களின் கிடங்காகத் திகழும் பப்புவர் நியூகினியாவில் எண்ணற்ற புதிய உயிரினங்களை எங்கள் குழு கண்டுபிடித்திருக்கிறது'' என்கிறார் ரிச்சர்ட்ஸ்.


இவர்கள் கண்டுபிடித்திருக்கும் புதிய உயிரினங்களில் ''மிகவும் அழகான'' வெள்ளை வால் எலி, இரண்டு சென்ரி மீற்றர் அளவுக்கு நீளமான மூக்குக் கொண்ட தவளை, பளிச்சென்ற மஞ்சள் நிறப் புள்ளிகள் கொண்ட தவளை ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மேலும், பூச்சியினங்கள், சிலந்திகளில் மட்டும் தலா 100 புதிய வகைகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

தவளைகள், ஊர்வனவற்றில் நிபுணரான ரிச்சர்ட்ஸ் மேலும் கூறுகையில்,

"பப்புவா நியூகினியாவில் புதிய உயிரினங்களைக் கண்டுபிடிப்பது ஒன்றும் பெரிய விடய மல்ல. நீங்கள் சாதாரணமாக ஓர் உலா சென்றாலே ஒரு புதிய உயிரினத்தையே அதிகம் அறியப்படாத அதிசயமான ஒன்றையோ காணலாம்''என்கிறார்.

பப்புவா நியூகினியாவின் கரடுமுடான, மலைப்பாங்கான நிலப்பரப்பு காரணமாக அங்கு அதிகமாக உயிரியல் ஆய்வாளர்கள் செல்லவில்லை. தற்போது புதிய உயிரினங்களைக் கண்டுபிடித்திருக்கும் ஆய்வாளர்கள், இன்னும் இங்கு பெரும்பாலான பகுதிகள் ஆய்வு செய்யப்படவில்லை என்று கூறுகின்றனர்.

# மூளை - சில தகவல்கள்



- சராசரியாக ஆணின் மூளையை விட பெண்ணின் மூளை 10சதவீதம் எடைகுறைவு
- அறிவுக்கும் மூளையின் எடைக்கும் சம்பந்தம் இல்லை.
- மனித மூளையின் வளர்ச்சி 20 வயதுடன் நின்றுவிடுகிறது.
- மனித மூளையின் எடை, உடலின் எடையில் 2 சதவீதம்.
- அறிவுக்குக் காரணமான மூளையின் அம்சம் -'கார்டெக்ஸ்' எனப்படும் மென்மையான மடிப்புகள். மடிப்புகள் அதிகமாக இருந்தால் அறிவும் அதிகமாக இருக்கும்.

# உடலின் இயக்கம்!

நமது உடலின் இயக்கம் ஒரு காலக் கணக்குக்கு உட்பட்டது. தூங்குவது, பசியெடுப்பது, கண்சிமிட்டுவது, சுவாசிப்பது போன்ற எல்லாமே கால அளவைக் கொண்டவை.

உடல் வெப்பம், இரத்த அழுத்தம், நாடி, சுவாசம், ஓமோன் செயற்பாடு ஆகிய எல்லாமே பூமியின் சுழற்சிக்கேற்ப ஏறவும், இறங்கவும் செய்கின்றன.


திறமை, மன இயல்பு, நோய் எதிர்ப்பு ஆற்றல் கூட இதனால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

வலிப்பு நோய் உள்ளவர்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் அது வருவதும், கர்ப்பிணிகளுக்குக் காலை வேளையில் குமட்டல் ஏற்படுவதும் இதற்கு எடுத்துக்காட்டுக்கள்.






# முதல் செய்திப் பத்திரிகை!




முதல் செய்திப் பத்திரிகை என்ற பெருமைக்கு உரியது' ஸிங்க் பாவோ' என்ற சீனப் பத்திரிகையாகும். பீஜிங்கிலிருந்து வெளிவந்த அந்த அரசவைப் பத்திரிகையின் பொருள் 'தலைநகரச் செய்தி' என்பதாகும். கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வெளியாகத் தொடங்கிய அந்தப் பத்திரிகை 1935 ஆம் ஆண்டு வரை பிரசுரமானது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பகாலங்களில் செதுக்கப்பட்ட மரத்துண்டுகளைத் கொண்டு அந்தப் பத்தரிகை அச்சிடப்பட்டது.முக்கிய செய்திகளை மக்களுக்கு அறிவிப்பதற்காக சீன அரசாங்கம் அந்தப் பத்திரிகையை வெளியிட்டது.

பழங்கால ரோமாபுரியிலும் அரச வெளியீடாக ஒரு செய்திப் பத்திரிகை வெளியானது. 'ஆக்டா டியூரன்' என்ற அப்பத்திரிகையின் பொருள் 'அன்றாட நிகழ்வுகள்' என்பதாகும். 16 ஆம் நூற்றாண்டில் இருந்து மக்கள் செய்திப் பத்திரிகையை விலை கொடுத்து வாங்கிப் படிக்க ஆரம்பித்தனர்.

# 'பேனா' பிறந்த விதம் !

நம் மனதில் தோன்றும் எண்ணங்கள், கருத்துக்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் பதிவுக் கருவி, பேனா. அது தோன்றிய விதம் தெரியுமா? இன்று நாம் பயன்படுத்துவதற்கு எளிதான பேனாக்களை உபயோகப்படுத்துகிறோம். ஆனால் ஆரம்பத்தில் அவ்வாறு இல்லை.


பேனாவுக்குப் பல நூற்றுாண்டு வரலாறு உண்டு என்பது ஆச்சரியமான விடயம்.

" லத்தீன்" மொழியில் "பென்னா" என்றால் " பறவையின் இறகு" என்று பொருள். 'பென்னா' என்பதே ஆங்கிலத்தில் 'பென்' என்றும், தமிழில் 'பேனா' என்றும் மாறியது. ஐந்தாம் நூற்றாண்டில்' இறகுப் பேனா' வழக்கத்துக்கு வந்தது.

அது 18ஆம் நூற்றாண்டு வரை பயன்பாட்டில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

1780 இல் சாமுவேல் ஹாரிசன் என்பவர் உருக்கினால் ஆன பேனாவைத் தயாரித்தார்.1809 இல் ஜோசப் பிராமா என்பவர், பறவையின் இறகை, தற்போதுள்ள வடிவில் வெட்டி 'நிப்'பை உருவாக்கும் கருவியைத் தயாரித்தார்.

ஜான் ஹாக்கின்ஸ் என்பவர் மாட்டுக் கொம்பு, ஆமை ஓடு ஆகியவற்றைக்கொண்டு 'நிப்' செய்தார்.



'நிப்' பின்முனை யில் 'இரிடியம்' வைக்கும் பழக்கம் 1882 இல் வந்தது. அதே ஆண்டு ஜான் மிட்சல் என்பவர் எந்திரத் தினால் செய்யப்பட்ட உருக்கு 'நிப்'பை கண்டுபிடித்தார்.

1859 இல் முதல் முறையாக 'ஊற்றுப் பேனா' (பவுண்டன் பென்) காப்புரிமை பதிவு செய்யப்பட்டது. 1883ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த வாட்டர்மேன் என்பவர் அனைவரும் பயன்படுத்தத்தக்க ஊற்றுப்பேனாவைத் தயாரித்தனர்.






உடுவில் கோட்டமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 18 வயதுப் பிரிவில் முதலிடம் பெற்ற யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி மற்றும் இரண்டாமிடம் பெற்ற இணுவில் மத்தியகல்லூரி அணிகளை படத்தில் காணலாம். (படங்கள் :-சுன்னாகம் செய்தியாளர்)

# முஸ்லிம் இளைஞர்கள் அமைதி வழி அரசியலில் முனைப்புக்காட்ட வேண்டும்

## ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

முஸ்லிம் இளைஞர்கள் அமைதியான வழியில் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் இளைஞர்கள் வன்முறைகளில் ஈடுபடாது அமைதி வழி அரசியலில் முனைப்புக் காட்ட தூண்டுவதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முதன்மை நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழாமுடன் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சில தரப்பினர் குற்றம் சுமத்துவதனைப் போன்று இலங்கையில் முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்கள் இயங்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். முஸ்லிம் இளைஞர்களிடையே வன்முறை வெடிப்பதனை தமது கட்சி தவிர்த்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தமிழ்ச் சிறுமியை கடத்தி கப்பம் கோரிய பெண்ணுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

களுத்துறை மாவட்டத்தின் குடலிகம தமிழ் மகாவித்தியாலயத்தில் பயிலும் தமிழ்ச் சிறுமி ஒருவரை கடத்திச் சென்று 50 ஆயிரம் ரூபா கப்பம் கோரிய பெண் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


களுத்துறை நீதவான் நீதிமன்றம் எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி வரை இவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

காசினி சிவகுமார் என்கிற இச்சிறுமி பாடசாலை நுழைவாயில் அருகில் நின்று கொண்டிருந்த போது, அங்கு வந்த இப்பெண் இனிப்புப்பண்டங்களை வாங்கித் தருவதாக ஆசை வார்த்தை கூறி சிறுமியை கிகியனகந்த தோட்டத்தை நோக்கி அழைத்துச் சென்றிருக்கிறார். பின் பாடசாலையின் அதிபருக்கு தொலைபேசி அழைப்பு விடுக்கச் சொல்லி சிறுமியிடம் சொல்லியிருக்கிறார்.

50ஆயிரம் ரூபா கப்பம் தந்தால் மாத்திரம் விடுவிக்கப்படுவார் என்று சிறுமியை சொல்ல வைத்தார். அதிபர் உடனடியாக தெபுவன பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார். பொலிஸார் குழுக்களாக பிரிந்து சிறுமியைச் தேடினர். சுமார் 3 மணித்தியாலயங்களுக்குள் சிறுமியைக் கண்டு பிடித்தும் விட்ட னர்.

சிறுமியை இட்டதொட என்ற இடத்தில் இருந்து மீட்டமையுடன் கடத்தல்காரியை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜராக்கினர். சிறுமியின் தாய் வெளிநாடு ஒன்றில் பணியாற்றுகிறார் என்பதும் சிறுமி தாயின் பெற்றோர்களின் பராமரிப்பில் இருந்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# நீ.மரியசேவியர் அடிகளாருக்கு எமது வாழ்த்துக்கள்



கடந்த 06.10.2010 இல் எமது மன்றத்தின் இயக்குநர் **நீ.மரியசேவியர்**அடிகளாருக்கு யாழ். பல்கலைக்கழகத்தினால் கௌரவ கலாநிதி(Ph.D.h.c)பட்டம் வழங்கப்பட்டதையிட்டு நாம் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். ஏற்கனவே B.Th,.L.Th.(Romc), புலவர் (மதுரை) M.A.,Ph.D.(London),D.Th (PassauGermany) போன்ற கல்விசார் பட்டங்களைப் பெற்று, கிரேக்கம், எபிரேயம், லத்தீன் உட்பட பத்துக்கும் மேற்பட்ட மொழிகளில் புலமை பெற்ற அடிகளார் மேற்புலத்தின் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் கருத்தரங்குகளையும் விரிவுரைகளையும் நடத்தியுள்ளார். உலகின் பல நாடுகளுக்கு (அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா) கலைப்பயணங்களை மேற்கொண்டு கலைநிகழ்ச்சிகளையும், கலைசார் விரிவுரைகளையும் நடத்தியதுடன் சைவ சித்தாந்தத்தின் பெறுமானத்தையும் உலகறியச் செய்துள்ளார்.

பல்துறைசார் கல்வித்தகைமையும், பன்மொழிப்புலமையும். பல்கலை ஆளுமையும் பெற்ற அடிகளார் ஒரு சிறந்த சமூகத் தொண்டனும் கூட. இதன் காரணமாகவே இவருக்கு "கலைத்தூது ", "கலைஞான வித்தகர்", "கலாமேதை", "கலைச்சுடர்", "கலையின் காவலர்" எனும் விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் அவர் பின்னால் அணிவகுத்து நிற்கும் திருமறைக்கலாமன்ற (சி.பி.ஆட்ஸ், றங்ககலா கேந்த்ரய) கலைஞர்களும், தொண்டர்களுமாகிய நாம் அவரை வாழ்த்தி நிற்கின்றோம்.

**இலங்கை திருமறைக்கலாமன்ற மையங்கள்**

| | |
|---|---|
| ✷மாத்தறை | ✷புத்தளம் |
| ✷காலி | ✷வவுனியா |
| ✷அம்பாந்தோட்டை | ✷கொழும்பு |
| ✷அபிசாவளை | ✷பாணந்துறை |
| ✷மொனராகலை | ✷கிளிநொச்சி |
| ✷கண்டி | ✷மன்னார் |
| ✷பொலநறுவை | ✷மட்டக்களப்பு |
| ✷அனுராதபுரம் | ✷திருகோணமலை |
| ✷இரத்தினபுரி | ✷ஹப்புத்தளை |
| ✷யாழ்ப்பாணம் | ✷இளவாலை |

✷சர்வதேச திருமறைக்கலாமன்ற மையங்கள். (சி-1452)

# மாற்றுத் திறனாளர்களுக்கான முழுநாள் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

இதம் உளவள நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாற்று திறனாளர்களுக்கான முழு நாள் பயிற்சிப்பட்டறை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப்பட்டறையில் கோப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர், வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் நிர்வாக உத்தியோகத்தர்,ஜெயப்பூர் நிறுவன நிகழ்ச்சித்திட்ட அலுவலர் குழாம் ஆகியோர்கள் கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் போது மாற்றுத் திறனாளர்களின் மருத்துவச் சிகிச்சை தொடர்பாகவும் அவர்களின் உள விருத்தி தொடர்பாகவும் சமூக சேவை திணைக்களத்தின் செயற்பாடுகள் பற்றியதாகவும் பயிற்சிகள் இடம்பெறவுள்ளதாக கோப்பாய்பிரிவு ஆற்றுப்படுத்துனர் திருமதி ர.புஸ்பலதா தெரிவித்துள்ளார்.

இதம் உளவள நிறுவனமானது மாற்றுத் திறனாளர்களுக்கான உளவளத்துணை ,சுய தொழில் விருத்தி உதவி மற்றும் மருத்துவ சிகிச்சை,செயற்கை அவயவங்கள் பொருத்துதல்,நடமாடுவதற்கான உபகரண உதவி போன்றவற்றை எமது நிறுவனத்தின் ஊடாகவும் ஏனைய நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனங்களுடனும் பிரதேச செயலக சமூக சேவை பிரிவுடனும் வலைப்பின்னலை ஏற்படுத்தி அவர்களது தேவைகளினை பெற்றுக் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# கைதான பல்கலை.மாணவர்கள் மன்னிப்பு கோரி கடிதம் கையளிப்பு

(கொழும்பு)

ஜே.வி.வி. மீண்டும் நாட்டில் வன்முறை ஏற்படுத்த முயற்சித்து வருவதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் குழப்பதை ஏற்படுத்தி இரண்டு, மூன்று மாணவர்களை உயிரிழக்க செய்து பல்கலைக்கழகங்களை மூடுவதற்கு ஜே.வி.பி. திட்டமிட்டு வருகிறது. எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மை காலமாக பல்கலைக்கழக மாணவர்கள் செயற்பட்ட விதத்தை கவனிக்கும் போது ஒரு குழப்பகரமான நிலைமை இருக்கிறது. என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த ஜே.வி.பியினர் முயற்சித்து வருகின்றனர்.

இவர்களின் இந்த செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. எனவும் அமைச்சர் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை உயர்கல்வி அமைச்சுக்குள் புகுந்து சேதங்களை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள 21 மாணவர்கள் அரசாங்கத்திடம் மன்னிப்புக் கோரி கடிதம் அனுப்பியுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

## திரை விமர்சனம்




# ஒச்சாயி

மனைவி இறந்ததால், மகன் தயாவின் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு இரண்டாவது திருமணம் செய்கிறார் ராஜேஷ். விதி விளையாடுகிறது. இரண்டாவது மனைவிக்கும் வேறொரு இளைஞனுக்கும் தொடர்பு ஏற்படுகிறது.இதையறிந்த ராஜேஷ், ஆவேசத்தில் மனைவியையும் இளைஞனையும் கொலை செய்து விட்டு சிறைக்குச் செல்கிறார். உறவினர்களும் கைவிட்டதால், தயா அநாதையாகிறார். பின்னர் சின்னச்சின்ன திருட்டுக்களில் ஈடுபடும் அவர், எதிர்பாராத நேரத்தில் கொலையும் செய்கிறார். அவருக்கு ரவுடி திரவியபாண்டியன் அடைக்கலம் கொடுத்து தம்பியாக தத்தெடுக்கிறார்.

சிறையிலிருந்து விடுதலையாகும் ராஜேஷ், மகனுடைய நிலையை நினைத்து வருந்தி, திரவிய பாண்டியனிடம் இருந்து அவனை மீட்கப் போராடுகிறார். மகனை நல்லவனாக மாற்ற முயற்சிக்கும் அவர், அநாதையான தன் தங்கை மகள் தாமரையை மணம் முடித்து வைக்க பேசுகிறார். சித்தியின் தகாத செயலால் பெண்களை வெறுக்கும் தயா , தாமரையை விரும்பாமல் எடுத்தெறிந்து பேசுகிறார். ஆனால், நாளடைவில் அவர்களுக்குள் காதல் மலர்கிறது.

இந்நிலையில் பெரிய மனிதர் போர்வையில் ஒளிந்திருக்கும் சந்தானபாரதிக்கும் தயாவுக்கும் தொழிலில் போட்டி ஏற்படுகிறது.விரோதம் விருட்சமாக வளர்கிறது. ஒருவரை ஒருவர் கொல்லத் துடிக்கின்றனர். இதையறிந்த திரவியபாண்டியன் சந்தானபாரதியை எச்சரிக்கிறார். இதனால் பொங்கி எழும் சந்தானபாரதி, திரவியபாண்டியன் மற்றும் தயாவை போட்டுத் தள்ள வேறொரு ரவுடிக் கும்பலிடம் பேரம் பேசுகிறார். முடிவு என்ன என்பது கிளைமாக்ஸ்.

புது முகங்கள் தயா, தாமரை கரட்டருக்கு கச்சிதமாகப்பொருந்துகின்றனர். ஆனால் அவ்வப்போது தயா, 'பருத்திவீரன்' கார்த்தியின் மேனரிஸங்களை ஞாபகப்படுத்துகிறார். தாமரையை வீட்டை விட்டு விரட்டும் கோபத்தையும் பின்னர் அவர் இல்லாமல் தன்னால் இருக்க முடியாது என்ற காதலையும் நன்றாக வெளிப்படுத்தியிருக்கிறார்.தாமரை இயல்பாக நடித்துள்ளார். பெண்களை வெறுக்கும் தயாவிடம் பெண்களின் மேன்மையை மூச்சுவிடாமல் பேசும் போது , சபாஷ் சொல்ல வைக்கிறார்.

பெரிய மாயன் கரட்டரில் ராஜேஷ் வாழ்ந்திருக்கிறார். தன் மனைவி வேறொருவனுடன் இருப்பதை பார்த்து விட்டுப் பதறும் போதும், கோபத்தில் அவர்களை வெட்டிச்சாய்த்துவிட்டு, பின்னர் தன் மகனை நினைத்து வருந்தும்போதும் நச். கறுத்த பாண்டியாக வரும் தயாரிப்பாளர் திரவியபாண்டியன் , என்கவுண்டர் செய்ய வந்த பொலிஸிடம் வீரவசனம் பேசி மண்ணில் சாயும் போது கவனிக்க வைக்கிறார். ரெக்கார்ட் டான்ஸ் ஆடும் கஞ்சா கறுப்பு, ஷகீலா ஜோடி கலகலப்பு ஏற்படுத்துகின்றனர். குவார்ட்டர் போத்தலை காலி செய்ய உட்காரும் கறுப்பு , ஓட்டை கிளாசில் ஊற்றுகிறோம் என்று தெரியாமல் , மற்றவர்களை சந்தேகப்பட்டு வாங்கிக் கட்டிக்கொள்ளும் போது,'உச்' கொட்ட வைக்கிறார். சந்தான பாரதி மகனாக லூசுப்பையனாக வரும் ஒச்சு நல்ல தேர்வு. பிரேம் சங்கரின் ஒளிப்பதிவும் ஜீவராஜாவின் இசையும் கதையோட்டத்துக்கு உதவுகிறது. பெற்றோரின் அரவணைப்பு இல்லாமல் வளரும் மகனின் நிகழ்காலமும் எதிர்காலமும் எப்படி அமையும் என்று சொல்ல முயற்சித்திருக்கிறார் இயக்குநர் ஆசைத்தம்பி. பல வருடங்களாக இதேபோன்ற கதை மற்றும் காட்சிகளுடன் வந்த பல படங்களை ஞாபகப்படுத்துவதை தவிர்க்க முடியவில்லை. கிளைமாக்சும் எதிர்பார்த்த மாதிரியே வருகிறது. ஹீரோ கெட்டவன் என்று உணர்த்த, எப்போதும் அவனை போத்தலும் கையுமாக காட்டியிருப்பது நெருடல்.வன்முறைக்களத்தில், காதலைச் சொல்வதா? ரவுடிகளின் வாழ்க்கையைச் சொல்வதா என்று இயக்குநர் குழம்பியிருக்கிறார்.

# ஆரம்பமாகிவிட்டது ரஜினியின் 'அவதார்'




தனது இமயமலை பயணத்தை முடித்து சென்னை வந்த கையோடு "சுல்தான்தி வாரியாரை" முடித்துவிட தயாராகி விட்டார் ரஜினி. இதற்கான ஏற்பாடுகளை தொடங்கியுள்ளாராம் சௌந்தர்யாவுக்கு பதிலாக சுல்தானை இயக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கே.எஸ்.ரவிக்குமார்.

சௌந்தர்யா ரஜினிகாந்த் ஹாலிவுட் நிறுவனமான வார்னர் பிரதர்ஸுடன் இணைந்து தனது ஆக்கர் ஸ்டூடியோ பிறைவேட் லிமிடெட் நிறுவனம் சார்பில் இயக்கி தயாரித்த "சுல்தான் தி வாரியார்" சில பிரச்சினைகளின் காரணமாக பாதியிலேயே நிறுத்தப்பட்டது அனைவரும் அறிந்த பழைய செய்தி.

ஆக்கர் ஸ்டூடியோவிடமிருந்து சுல்தானை ஜெமினி லேப் வாங்கிய பின்னர் சுல்தான் தி வாரியார் பணிகள் சூடு பிடிக்க ஆரம்பித்து விட்டது என்பதுதான் புதிய செய்தி.

'அவதார்' பட பாணியில் சுல்தான் வளரவிருக்கிறதாம். 'அவதார்' படம் பாதி அனிமேஷனிலும் மீதி நிஜக் காட்சிகளாகவும் எடுக்கப்பட்டிருந்தது. அதே போல ரஜினி-விஜயலட்சுமி, வில்லன் ராகுல் கேஷம் ஆகியோர்களின் காட்சிகளை நிஜமாக எடுத்து , ஏற்கனவே சௌந்தர்யா எடுத்துள்ள அனிமேஷன் காட்சிகளுடன் இணைக்கப் போகிறாராம் கே.எஸ்.ரவிக்குமார்.

"சுல்தான் தி வாரியார்" புது அவதாரம் எடுத்துள்ளது போல, பெயரிலும் மாற்றம் பெறவுள்ளது. "சுல்தான்" என்னும் பெயரை "ஹரா" என மாற்றப் போகிறார்களாம்.

இப்படி புதிய மாற்றங்ளுடன் வேகமாக வளரத் தொடங்கிவிட்ட 'ஹரா' தமிழ் புத்தாண்டிற்கு முழு 3 டி படமாக வெளிவரவிருக்கிறதாம்.

# சிம்புவுடன் நடிக்க தமன்னா மறுப்பு?



"வேட்டை மன்னன்" படத்தில் சிம்புவுடன் நடிக்க தமன்னாவிடம் கால்ஷீட் கேட்கப்பட்டது.பின்னர் தமன்னா சிம்புவுடன் நடிக்கமுடியாது எனக் கூறினார் என செய்திகள் வெளியாகின. ஆனால் தமன்னா இதை மறுத்துள்ளார். சிம்பு கேட்கும் திகதி என்னிடம் இல்லை. அதனால் தான் நடிக்கவில்லை. நல்ல கரக்டரும், கால்ஷீட்டும் அமையும்போது நிச்சயம் சிம்புவுடன் நடிப்பேன் என்கிறார் தமன்னா.




# அப்பாவியாக நடித்த படங்கள் வெற்றி; ஆக்ஷன் பக்கம் திரும்பியது தவறு

## —மனம் திறக்கிறார் விஜய்

மெல்லிய கடல் அலை சலங்கை ஒலிக்கும் நீலாங்கரை வீட்டின் கதவு தட்டினால், பளிச்சென்று விஜய். " ரொம்ப நாளாகிவிட்டதல்லவா? விகடன்ல பேசி! தீபாவளி ஸ்பெஷல்...பேசாம இருக்கமுடியுமா?" -கண்கள் மட்டும் சிரிக்கும் ' விஜய்ஸ்பெஷல்' சிரிப்பு!

*" திடீர்னு அமைதியாகிட்டீர்கள். நாலைஞ்சு மாசமாதம் ஆகிவிட்டது உங்களுடைய குரலைக்கேட்டு. இப்போ 'காவலன்' எப்படி வந்திருக்கு?"*


நான் ரொம்ப அப்பாவியா, வெகுளியா நடித்த படங்கள் எல்லாம் நல்ல ஹிட். சிறிதுகாலம் ரூட் மாறி ஆக்ஷன் பக்கம் போனேன். இந்த 'பாடிகார்ட்' நான் முன்னாடியே செய்திருக்க வேண்டிய படம். சில காரணங்களால் முடியவில்லை. இப்போ அதில் நானே இஷ்டப்பட்டு நடிக்கிறேன். படத்தின் கல கல திரைக்கதை, பாடல்கள், 20 நிமிட க்ளைமாக்ஸ் எல்லாமே மனதை அள்ளிடும். " காதலுக்கு மரியாதை", " துள்ளாத மனமும் துள்ளும்" மாதிரி காதல் அதிகமா, ஆக்ஷன் குறைவா அமைந்த படம். "ப்ரெண்ட்ஸ்" படத்தில் நானும் வடிவேலுவும் அடித்த கூத்தை இப்போ பார்த்தாலும் சிரிப்பு வருதே. நிச்சயம் அந்த மஜிக் இந்தப் படத்திலும் இருக்கும். அடுத்து "வேலாயுதம்" . " ஜெயம்" ராஜாவுக்கும் எனக்கும் அலைவரிசை சரியா இருந்தது. படத்தை நல்லபடியாக கொண்டு வரவேண்டுமென கவலைவப்படுகிற அவரோட அக்கறையும் எனது விருப்பமும் ஒன்றுதான். எல்லாம் இப்போ சரியாகப் போய்க்கொண்டிருக்கு பார்க்கலாம்!"

*" என்ன, ஒரு படத்தோட உங்க பையனை சினிமாவில் இருந்து நிறுத்திவிட்டீர்கள்.. அவரும் " ஜூனியர்" விஜய் ஆக சினிமாவுக்கு வருவாரா?"*

" சும்மா ஒரு டான்ஸ் ஆடிப் பார்ப்போம் என்று ஆசைப்பட்டார். ஆடினார். திரும்ப அவர் படிப்பில் கவனம் ஆகிவிட்டார். இன்றைக்கு அவர் பிரியம் எல்லாம் கிரிக்கெட் மேலேதான். எல்லாம் சென்னை கிங்ஸ் போட்டிகள் பார்த்த எஃபெக்ட். அவுட்டோர் போயிடுறப்போ, சஞ்சய், திவ்யாவை ரொம்பவே மிஸ் பண்ணுவேன். அவர்கள் என்னை விடக் கஷ்டப்படுவாங்க. அதனால், என்னோட பாட்டு டி.வியில்வந்தா, சஞ்சய் ஆட ஆரம்பித்துவிடுவான். திவ்யா சிரிச்சுட்டே பார்ப்பாங்க. அப்படி பாசமலர் பிரதர் சிஸ்டர். கொஞ்சமே கொஞ்ச நேரம் கிடைத்தாலும், அவங்களை செல்லம் கொஞ்சுவதிலேயே சரியாப் போயிடுது.கண்டிப்பு டிபார்ட்மென்டலாம் அவங்க அம்மா சங்கீதாதான். பையன் நிச்சயம் ஒரு டிகிரியாவது படித்து பாஸ் ஆகணும் என்று இரண்டு பேருக்குமே ஆசை. பொண்ணுக்கு ஐந்து வயது. யு.கே.ஜி.போறாள்.வீடியோ கேம்ஸ்ல அவங்களை ஒரு தடவைகூட என்னால் ஜெயிக்கமுடியவில்லை. நம் பிள்ளைங்க, நம்மளைவிட செமஸ்பீடா இருக்காங்க.சரிக்குச் சரியா அவங்களோடு நம்மை அப்டேட் செய்யாம இருந்தா, அவங்க நம்மைத் தாண்டிப் போயிட்டே இருப்பாங்க, நம்ம பிள்ளைகள் தானே... தாண்டட்டும்!"

*" எம்.ஜி.ஆர்.சினிமாவை ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தினார். ஒவ்வொரு படத்திலும் அரசியல் பொடி தூவினார். உங்க படங்களில் அது இல்லையே. ஏன்?"*

' எம்.ஜி.ஆரோட காலம்வேற.மொழிப்பற்றும் , திராவிடப்பாரம்பரியமும் ஊறிக்கிடந்த காலம்.அப்ப அவர் சொன்ன கருத்து சரியாக இருந்தது.மக்களிடம் எடுபட்டது.இப்போது இருக்கிற இளைய தலைமுறை அரசியலை சினிமாவோடுகலக்கிறதைஆதாரிப்பார்களா என்று சந்தேகமாஇருக்கு. இந்த விடயத்தில் இளைஞர்களின் எண்ணம் என்ன என்று தெரிச்சுக்க எனக்கும் ஆசையா இருக்கு. அதேசமயம் காலமும், நேரமும், இடமும் சூழலும் அனுமதிக்கும்போது, என்னை அந்த இடத்தில் கொண்டு போய் வைக்கும்போது நிச்சயம் சினிமாவில் என் கருத்துக்களை வைப்பேன். அப்படி செய்யத் தயங்கமாட்டேன்....அஞ்சவும் மாட்டேன்!




*" நீங்க அரசியலுக்கு வருவது பற்றிய முடிவுக்கு வந்துவிட்டீர்களா?"*

"அதுஇருக்கட்டும். இப்ப ஷூட்டிங்குக்காக தமிழகத்தின் தென்கோடிக்குப் போயிருந்தேன்.ஊரில் இளைஞர்களே இல்லை. எல்லோரும் சென்னைக்கோ, வெளிநாட்டுக்கோ பிழைக்கப் போயிருக்கிறார்கள். நாம எல்லோரும் விவசாயத்தை மறந்துவிட்டோம்.இனிமே எதிர்கால விஞ்ஞான மாற்றத்தில் எல்லாமே கிடைக்கும். பேசுகின்ற செல்போன்கூட 100க்கு கிடைக்கலாம். ஆனால், சாப்பிட அரிசி ? விளை நிலங்களைத் தவிக்கவிட்டால், திரும்ப நாம தவிர்த்து நிற்கும்போது, நமக்குச்சோறு போட அதுக்கு இஷ்டம் இருக்குமா? அடுத்த தலைமுறை "விவசாயம் என்றால் கிலோ என்ன விலை" என்று கேட்குமே? பெருந்தலைவர் காமராஜர் எப்பவும் கல்வியும் விவசாயமும்தான் நமக்கு வேணும் என்று திரும்பத் திரும்பச் சொன்னார். அதை நாம் செய்யாம விட்டுட்டோம்.எனக்கு முதலில் இளைஞர்களை விவசாயம் பக்கம் திசை திருப்ப ஏதாவது செய்யணும் என்று தோன்றுகிறது!"

# ஈழத் தமிழ்ப் போராளிகளை பிளவுபடுத்தியவர் கருணாநிதி!

## பொங்கியெழுகிறார் பழ.நெடுமாறன்

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் திடீரென ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து நெடிய அறிக்கை ஒன்றை முதல்வர் கருணாநிதி வெளியிட்டார். புலிகள் மீதான குற்றச்சாட்டில் தொடங்கும் இந்த அறிக்கை, ராஜபக்ஷ' கொடுத்த ஒரு வேண்டுகோளுடன் முடிவது தமிழ் உணர்வாளர்கள் மத்தியில் புதிய கொந்தளிப்பை



எழுப்பியுள்ளது. இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறனிடம் பேசினோம்,

**"போரால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழரின் மறுவாழ்வு பற்றி முதல்வர் கருணாநிதி மீண்டும் முக்கியத்துவம் கொடுத்துப் பேசி இருக்கிறாரே?"**

"இலங்கையில் தமிழர்களின் பேரழிவுக்கு காங்கிரஸும்" தி.மு.க. வும் தான் பொறுப்பு! ஒரு இலட்சம் அப்பாவித் தமிழர்களைப் பதை பதைக்கப்படுகொலை செய்ய சிங்கள அரசுக்கு, இந்திய அரசு ஆயுதம் தந்தது. மத்திய அரசில் ஓர் அங்கமாக இருந்தும், தமிழர் அழிவைத் தடுக்க தி.மு.க. எதுவுமே செய்யவில்லை. மாறாக, தமிழக மக்களை ஏமாற்ற வரிசையாக நாடகங்களை மட்டும் அரங்கேற்றியது. முள்வேலி முகாமில் இருந்து மூன்று இலட்சம் தமிழ் மக்களை விடுவிக்குமாறு தமிழகமே கொதித்துப் போராடியபோது, சர்வ கட்சிக் குழுவை அனுப்புமாறு வலியுறுத்தப்பட்டது. ஆனால், கருணாநிதி தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி எம்.பி.க்களை மட்டும் அங்கு அனுப்பிவைத்தார். அவர்கள் திரும்பி வந்த பின்னர் அவரே ஓர் அறிக்கை தந்தார். முகாம்களில் உள்ள மக்கள் 3 மாதங்களில் அவரவர் ஊர்களில் குடியேற்றப்படுவார்கள் என்று மகிந்த ராஜபக்ஷ உறுதி தந்துவிட்டார் என்றும் மக்களுக்குச் செய்யப்படும் உதவிகள் ஓரளவு திருப்தி தருவதாகவும் கூறினார் கருணாநிதி. ஆனால், இன்னமும் அந்த மக்கள் பெரும் துன்பத்தில்தான் இருக்கிறார்கள்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு இந்தியா உதவ வேண்டும்என இப்போது அவரே கூறுகிறார். காங்கிரஸுக்கும் தி.மு.க.கவுக்கும் உள்ள உறவில் நெருடல் ஏற்படும்போது, ஈழத்தமிழர் பிரச்சினையைக் கையில் எடுப்பதும்... திராவிடம்பற்றிப் பேசுவதும் அவரது அரசியல் தந்திரங்கள். உறவு இணக்கமாக இருக்கும் போது, அதைப்பற்றி மூச்சுகூட விடமாட்டார்!"

**"போர் மேகங்கள் சூழத் தொடங்கியதில் இருந்தே,மத்திய அரசு தலையிட்டுத்தடுக்க வேண்டும் என முதல்வர் தொடர்ந்து கூறிக்கொண்டுதானே இருந்தார்?"**

"மன்மோகன் சிங் பிரதமராகப் பதவியேற்ற 2004ஆம் ஆண்டு முதல் 2009 வரை சிங்கள இராணுவத்தினருக்கு இந்திய இராணுவம் பயிற்சி அளித்தது. சிங்கள இராணுவத்தில் 63 சதவிகிதம் பேர் இப்படி இந்தியாவில் பயிற்சி பெற்றனர். 2008-09ஆண்டுகளில் விடுதலைப்புலிகளுக்கு உதவிப் பொருள்கள், ஆயுதங்கள் கொண்டுவந்த 13க்கும் மேற்பட்ட கப்பல்களை இந்தியக் கடற்படையின் உதவியுடன் சிங்களக் கடற்படை அழித்தது. வெளியில் இருந்து விடுதலைப்புலிகளுக்கு எந்த வித ஆயுத உதவியும் வராதவாறு,இந்தியக் கடற்படை தடுத்தது இந்திய இராணுவத்தின் முன்னாள் லெஃப்டி னென்ட் ஜெனரல் சதீஷ் சந்திரா நம்பியார், இலங்கை இராணுவத்துக்கு ஆலோசகராகப் பணியாற்றினார். உச்சக்கட்டமாக... ஏவுகணைகள், ராடார்களுடன் அவற்றை இயக்க இராணுவப் பொறியாளர்களையும் டில்லி அரசு அனுப்பி வைத்தது.


இவை எல்லாம் நடந்தபோதும் மத்திய அரசில் தி.மு.க. அங்கம் வகித்தது. இவர்கள் தயவில்தான் காங்கிரஸ் அரசு உயிர் பிழைத்தது. உண்மையிலேயே ஈழத் தமிழர்கள் மீது கருணாநிதிக்கு அக்கறை இருந்தால்... மத்திய அரசுக்கான ஆதரவை அப்போதே விலக்கி இருக்க வேண்டும்; அப்படிச் செய்து இருந்தால், காங்கிரஸ் அரசு கவிழ்ந்திக்கும்; அதே சமயம், காங்கிரஸ் உதவியால் தமிழ்நாட்டில் பதவியில் இருக்கும் தி.மு.க அரசையும் காங்கிரஸ் கவிழ்த்து இருக்கும். எனவே,தனது அரசைக் காப்பாற்றிக்கொள்வதற்காக ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்களை கருணாநிதி பலிகொடுத்தார் என்பதுதான் உண்மை!"

**"போர் நிறுத்த முயற்சி பற்றி எம்.கே. நாராயணனும் சிவசங்கர் மேனனும் அவ்வப்போது பேசிவிட்டுச் சென்றதாக முதல்வர் கூறினாரே?"**

"இலங்கையில் போர் முடிந்தவுடன் மஹிந்த ராஜபக்ஷவின் தம்பி பசில் ராஜபக்ஷ சில உண்மைகளை வெளியிட்டார். 'போர் நெருக்கடியான நேரத்தில் இந்திய - -இலங்கை அரசுகள் இணைந்து செயல்படுவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தியத் தரப்பில் எம்.கே.நாராயணன், சிவசங்கர் மேனன்,உள்துறைச் செயலாளரும் இலங்கைத் தரப்பில் பசில், கோத்தபாய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளரும் இடம்பெற்றனர். அந்தக் கால கட்டத்தில்



இலங்கை இராணுவத்துக்கு என்னென்ன உதவிகள் வேண்டும் என இந்தக் குழு கூடிப் பேசி, அதன்படி இந்திய அரசு உதவிகளைச் செய்தது. இதற்காகவே நாராயணனும் சிவசங்கர் மேனனும் அடிக்கடி கொழும்பு வந்து சென்றனர்' என்பது பசில் ராஜபக்ஷவின் ஒப்புதல் வாக்குமூலம். ஆனால், போர் நிறுத்தம் குறித்து ராஜபக்ஷவிடம் வலியுறுத்துவதற்காகவே எம்.கே. நாராயணனும் சிவசங்கர் மேனனும் கொழும்பு சென்றதாக கருணாநிதி உண்மையைத் திரித்துக்கூறி, தமிழக மக்களை ஏமாற்றினார்!"



**"போரில் அப்பாவி மக்கள் கொல்லப்படத்தான் செய்வார்கள் எனப் பேசிய ஜெயலலிதாவுக்கு ஆதரவாக, ஈழத் தமிழ்ப் பற்றாளர்கள் குரல் உயர்த்தி பிரசாரம் செய்வதாக கருணாநிதி குறிப்பிட்டு இருக்கிறாரே?"**

"ஜெயலலிதா,அவ்வாறு பேசியது மன்னிக்க முடியாத தவறு.ஆனால், ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் கருணாநிதி என்ன செய்தார். என்பதுதான் முக்கியம்! ஈழத் தமிழர் பிரச்சினை ஒரு புறம் இருக்க, தமிழ்நாட்டு மீனவர்களை சிங்களக் கடற்படை வேட்டையாடுவதைத் தடுத்து நிறுத்த இவர் என்ன செய்தார்? தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பில் இருந்துகொண்டு தன் குடி மக்களைப் பாதுகாக்க முடியாதவர்,மற்றவர்கள் மீது குற்றம் சாட்டுவதற்கான அருகதையை இழந்துவிட்டார். ராஜபக்ஷவைப் பாதுகாப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ... அதை எல்லாம் இன்னமும் தவறாது செய்கிறார் கருணாநிதி!"

**"இலங்கையில் சகோதர யுத்தம் நடக்காமல் இருந்திருந்தால், வரலாறு வேறு வடிவம் பெற்றிருக்கும் என முதல்வர் ஆதங்கப்படுவதிலும் உண்மை இருக்கிறதே...?"**

"சரியாகச் சொன்னால்,1986 மே மாதத்தில் மதுரையில் 'டெசோ' மாநாடு முடிந்த பின்னர், ஈழத்தில் போராளிகளுக்குள் மோதல் ஏற்பட்டது. இந்திய அரசின் 'றோ' உளவுத்துறைதான் அதற்குக் காரணம். 'ரெலோ' இயக்கத்துக்கு ஏராளமான ஆயுதங்களைக் கொடுத்து,புலிகளுடன் மோதும் படி தூண்டிவிட்டது 'றோ'. அதன்படி, அவர்கள் ஆங்காங்கே விடுதலைப்புலிகளை சுட்டார்கள். சிலரைப் பிடித்துக்கொண்டு போனார்கள். அப்போது விடுதலைப்புலிகளின் சார்பில் இது குறித்து "ரெலோ" தலைவர் சிறீசபாரத்தினத்துடன் பேச்சு நடத்த கப்டன் லிங்கம் அனுப்பி வைக்கப்பட்டார். அந்த லிங்கத்தின் இரு கண்களையும் தோண்டி எடுத்து, அவரைக் கொடூரமாகக் கொலை செய்தார் சிறீசபாரத்தினம்.

*13ஆம் பக்கம் பார்க்க....*

ஜூனியர் விகடன்

# பங்கு முதலீடு தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டியவை

இன்று நாளாந்தப் பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக பல்வேறு வியாபாரம் சார்ந்த தகவல்களை அறியமுடிகிறது. இருந்தும், அவற்றில் சிலவற்றுக்கு எம்மால் மிகக் கூடுதலான முக்கியத்துவம் வழங்கப்படுவதனை உணர முடிகின்றது. இதற்கு அத்துறை சார்பாக நாம் கொண்டுள்ள பிரத்தியேகமான விருப்பம் அல்லது ஈடுபாடு அடிப்படையாக அமைந்து விடுகின்றது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் நடைமுறை உலகில் ஏற்படுகின்ற மாறுதல்களை உள்வாங்கி கொள்ள பழகிக்கொள்வதன் ஊடாக பொருளாதாரத்தில் பல சிறப்பம்சங்களை எமதாக்கிக் கொள்ள முடியும். இது சாதாரண மக்களின் வருமான மட்டத்தில் செல்வாக்கு செலுத்தும்.

**இலங்கையில் பின்வரும் நிலைமைகளை எம்மால் அவதானிக்க முடிகிறது**

வட்டி வீதமானது படிப்படியாக குறைவடைந்து செல்லும் போக்கினை கொண்டிருத்தல், பணவீக்கமானது தொடர்ந்து கணிசமான அளவு காணப்படுதல், இலங்கையின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சி வீதமானது இந்த ஆண்டு 7%தொடக்கம் 8%வரை அமையலாம் என துறைசார் வல்லுநர்கள் எதிர்வு கூறியிருத்தல், உற்பத்தி, உட்கட்டுமானம் மற்றும் உல்லாசதுறைகளில் பாரிய உள்நாட்டு, வெளிநாட்டு மூலதன உட்பாச்சல்களை அவதானிக்க முடிகிறது. இவை நாட்டினை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கான படிகற்களாக அமைகின்றன. இவ்வாறாக மாறுதல்களை தொடர்ச்சியாக பேணத்தக்க வகையில் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தம்மை தயார்படுத்திக்கொள்ளத் தொடங்கிவிட்டன. இதற்கு அடிப்படையாக தமது விரிவாக்கத்திறகுத் தேவையான முதல் நிதியினை பொதுமக்களிடமிருந்து திரட்ட பல நிறுவனங்கள் பங்குச்சந்தையில் பட்டிலப்படுத்த முன்வருவதனை அண்மைக்காலங்களில் நாம் அவதானிக்க முடிகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் நாம் பங்கு முதலீடுகள் பற்றி அறிந்து கொள்வதன் மூலம் அரச நிறுவனங்கள், கம்பனிகள் பங்குகளை வழங்குகின்றபோது அவற்றில் முதலீடு செய்து உரிமையாளர்களாக மற்றும் பயனாளிகளாக எம்மை மாற்றிக்கொள்ள முடியும்.

**பங்கு வழங்கல் என்றால் என்ன?**

இலங்கையில் அரச மற்றும் தனி



யார் நிறுவனங்கள் தமது செயற்பாட்டு விரிவாக்கத்திற்கு தேவையான நிதியினை (முதல்நிதி மற்றும் கடன்நிதி) பொதுமக்களிடமிருந்து திரட்டிக் கொள்ளும் நோக்கத்துடன் தமது உரிமைத்துவத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் பத்திரங்களை(பங்குகளை) பொது மக்களுக்கு குறித்த விலையில் வழங்குதல் பங்குவழங்கல் எனப்படும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் அரச, தனியார் நிறுவனங்கள் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளாக மாற்றப்படுகின்றன **(Public Limited Company).**

இதனால் இக்கம்பனிகள் நிதிப் பயன்பாடு, தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ நிர்வாகம் போன்றவற்றில் ஏற்படுகின்ற புரட்சி கம்பனிகளின் விரிவாக்கங்களுக்கு அடிப்படையாக அமைகின்றது. இவ்வாறாக இலங்கையில் 238 வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகள் காணப்படுகின்றன. அவற்றில் எமக்கு நன்கு பரிச்சயமான சிறிலங்கா ரெலிகொம், கொமர்ஷல் வங்கி, நவலோக ஹொஸ்பிற்றல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**முன்விபரணம் என்றால் என்ன?**

**Prospectus**

அரச மற்றும் தனியார் உடைமை நிறுவனங்கள் பொதுமக்களுக்கு பங்குகளை வழங்கத் தீர்மானிதபின் அப்பங்குகளை வாங்குமாறு விடுக்கப்படும் பகிரங்க அழைப்பு முன்விபரணம் எனப்படும். இது கம்பனியின் கடந்தகால நிதி சார்ந்த, சாராத அனைத்துப் பெறுபேறுகளை உள்ளடக்கிய தகவல் திரட்டாக கொள்ள முடியும்.

ஒவ்வொரு தனிநபரும் கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்ய முன் முன்விபரணத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை அறிந்து கொள்ளுதல் மிக முக்கியமாகும். புரிந்து கொள்ள கடினமான விடயங்கள் தொடர்பில் பங்கு வழங்கலுடன் தொடர்புடைய முகவர்கள், பங்குத்தரகர்கள், வங்கி முகாமையாளர்கள் மற்றும் இத்துறைசார் வல்லுநர்களின் உதவியினை பெற்றுக் கொள்ளமுடியும்.

**முன்விபரணம் பின்வரும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்**

1) **கம்பனியின் அண்மைக் காலப் போக்கு பற்றிய விபரங்கள்:-**

➢ கம்பனியின் நீண்டகால குறுங்கால நோக்கெல்லைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளதுடன், அதனை அடைவதற்கான சாதக, பாதக நிலைமைகள் பற்றிய ளீவளிப்படுத்தல்கள்

➢ பொருளாதாரத்தில் குறித்த கம்பனியின் பங்களிப்பு தொடர்பான விடயங்கள்

➢ கம்பனியின் கடந்தகால மற்றும் நிகழ்கால வளர்ச்சி வீதங்கள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருத்தல்

2) **கம்பனியின் கட்டமைப்பு தொடர்பான வெளிப்படுத்தல்கள்**

➢ கம்பனியின் அதிகாரப்பகிர்வு கட்டமைப்பு தொடர்பான விபரங்கள். இதில் இயக்குநர்களின் அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் தகைமைகள் போன்றன தெளிவாக வெளிப்படுத்தப் பட்டிருக்கும்.

➢ கம்பனியின் நிதிக்கட்டமைப்பு: இதில் கம்பனியின் உரிமை முதல், கடன் முதல் தொடர்பான விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கும்.

➢ நிறுவனக் கூட்டிணைப்புத் தொடர்பான விபரங்கள். இதில் தாய்க் கம்பனி மற்றும் துணைக் கம்பனிகள் தொடர்பான வெளிப்படுத்தல்கள்.

3) **கம்பனியின் சொத்துகள்பொறுப்புகள் தொடர்பான விபரங்கள்**

➢ கம்பனியின் குறைந்தது 5 வருடகால நிதிநிலைமைகளை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் வெளிப்படுத்தப்பட்டிருத்தல். இதில் இலாபநட்டக் கணக்கு, ஐந்தொகை, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் உரிமைமாற்றுக் கூற்று என்பன உள்ளடங்கி இருக்கும்.

4) **பங்கு வழங்கல் தொடர்பான வெளிப்படுத்தல்கள்**

➢ கம்பனி வழங்கத் தீர்மானித்த பங்குகளின் அளவு, பங்கு வகை, அவற்றின் அறிமுக விலை போன்ற வெளிப்படுத்தல்கள்

➢ பங்கு வழங்கல்களின் முதன்மை மற்றும் துணை நோக்கங்களின் தெளிவான வெளிப்படுத்தல்கள்

➢ பங்குகளில் முதலீட்டினை மேற்கொள்பவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் சார்ந்த விடயங்கள்

5) **பங்குகளை கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பபடிவம்**

❖ விண்ணப்பப்படிவம் பின்வரும் தகவல்களை வெளிப்படுத்துதல் போதுமானது.

➢ விண்ணப்பதாரியின் பெயர், முகவரி தொடர்பிலக்கம் போன்ற தகவல்கள்

➢ பங்கின் வகை, அவற்றின் அறிமுக விலை தொடர்பான விபரங்கள்

➢ பணக்கொடுப்பனவு தொடர்பான இலகு மற்றும் பாதுகாப்பான நடைமுறைகள்.

➢ பணம் மீளப்பெறுதல் தொடர்பான நடைமுறைகள். அதாவது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் சந்தர்ப்பத்தில்

➢ நீங்கள் கணக்கு ஒன்றைப் பேணுபவராக இருப்பின் உங்கள் கணக்கிலக்கத்தினை படிவத்தில் வெளிப்படுத்துவதனூடாக பங்குப்பத்திரங்களை பாதுகாப்பாக ,நேரடியாக பங்குச்சந்தையில் பரிமாற்றங்களுக்கு உட்படுத்த முடியும்.

பின்வரும் கம்பனிகள் பொது மக்களுக்கு பங்குகளை வழங்க முன்வந்துள்ளன. இவற்றின் விண்ணப்பப்படிவங்களை பங்குச்சந்தையில் பெற்றுக்கொள்ள முடியும்.

1)லாவ் காஸ் பிரைவட் லிமிட்டட்
2)ஹைட்ரோ பவர் பிறிலங்கா லிமிட்டட்

**மு.திலீபன்**
**கொழும்பு பங்குப்பரிவர்த்தனை -யாழ்ப்பாணக் கிளை**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 111.09 | 112.69 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 175.25 | 178.94 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.92 | 157.67 |
| சுவிஸ் பிராங் | 114.08 | 117.82 |
| கனேடிய டொலர் | 107.58 | 111.19 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.53 | 111.82 |
| சிங்கப்பூர் டொலர் | 84.96 | 87.07 |
| ஜப்பான் யென் | 1.35 | 1.39 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.53 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.45 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




## புரோட்லண்ட் நீர் மின் திட்டத்தால் தேசிய மின் கட்டமைப்புக்கு 35 MW

35மெகா வோட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய புரோட்லண்ட் நீர் மின் உற்பத்தி நிலைய நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பாக இலங்கை மின்சாரசபைக்கும் சீன தேசிய உதிரிப்பாக கூட்டுத்தாபனத்துக்குமிடையில் கடந்த புதன்கிழமை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

களனி கங்கையினூடாக மேற்கொள்ளப்படும் இறுதி நீர் மின் உற்பத்தி நிலையமான புரோட்லண்ட் திட்டம் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு 2014-ம் ஆண்டில் தேசிய மின் கட்டமைப்புடன் 35மெகா வோட் மின்சாரம் இணைக்கப்படவுள்ளது. 82 மில்லியன் டொலர் செலவில் சீனக் கம்பனி இதனை நிர்மாணிக்க முன்வந்துள்ளது.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க் புரோட்லண்ட் மின் உற்பத்தி நிலையம் கிதுல்கலயில் நிர்மாணிக்கப்படும். 114 மீற்றர் நீளமும் 24 மீற்றர் உயரமும் கொண்டதாக இது அமைக்கப்படவுள்ளதோடு 3.5 கிலோமீற்றர் நீளம், 5.4 மீற்றர் விட்ட பிரதான சுரங்கப் பாதையுடனும் நிர்மாணிக்கப்படும்.

எரிபொருள் ஊடான மின் உற்பத்திக்கு 25 ரூபாய் செலவாகிறது. நீர் மின் உற்பத்திக்காயின் ரூ. 2.50 தான் செலவாகிறது. எனவே நீர் மின் உற்பத்தி திட்டங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தவுள்ளோம்.

புதிய லக்ஷபான உற்பத்தி நிலையம் 14 மெகாவோட் மின் உற்பத்தி செய்யும் வகையிலும், பழைய லக்ஷபான 3.2 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையிலும் திருத்தப்படும் எனத் தெரிவித்தார்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6626.86 | 6685.99 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7149.26 | 7270.80 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 13,501.44 | |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** பேருவளை வோல்க்இன்(191.10), மிரமர்(151.00), பிறின்ட் கெயார் பிஎல்சி(132.30), கோல்ட் ஸ்ரோர்ஸ் (492.70), போகல கிரபைட்(61.90).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** கொழும்பு பார்மசி(1824.00), எஸ்.எம்.பி.லீசிங் (1.00), புளுடைமண்ட்ஸ்(4.20), ரீஸ் அக்ரோ(2.30), அகலவத்தை(40.00).

மேலதிக தகவல்கள்: **www.cse.lk**

# பல அரச நிறுவனங்கள் ஐ.பி.ஓ. மூலம் பங்குகளை வழங்க முடிபு

செல் காஸ் கம்பனி விரைவில் பங்குகளை வழங்கவுள்ளது. சிறிலங்கன் எயார்லைன்ஸ் கேட்டரிங் நிறுவனத்தைத் தொடர்ந்து செல் காஸ் நிறுவனம் பொது பங்கு வழங்கலை மேற்கொள்ளவுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத் தகவல்படி,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC), இலங்கை மின்சார சபை (CEB), சிறிலங்கன் எயார்லைன்ஸ், ஐரிஎன் (ITN) மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனம் என அரச நிறுவனங்கள் வரிசையாக கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதை ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் உறுதிப்படுத்தியுள்ளார். பொருத்தமான நேரத்தில் இவை பட்டியல்படுத்தப்படுமெனவும், இந் நடவடிக்கையை மேற்கொள்ள நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிறுவனங்கள் பலவற்றின் நிதிநிலை நன்றாக இல்லாததால் இந்நிறுவனங்களின் 15-20%பங்குகளை பட்டியல்படுத்துவதன் மூலம் அவற்றின் கடன் சுமையிலிருந்து விடுபடலாம். பின்னர் அவற்றின் நிதிநிலையை மேம்படுத்தலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**ஊழியர் சேமலாப் நிதியம்(EPF)**

ஊழியர் சேமலாப நிதியப் பணம் 2 ஆயிரத்து 700கோடி ரூபாய், கொழும்பு பங்குச்சந்தையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள 76 கம்பனிகளில் முதலிடப்பட்டுள்ளதாக அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.

6 நிதிநிறுவனங்கள், வங்கிகள் மற்றும் ஹோட்டல்கள், பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் ஹொஸ்பிட்டல்களில் மேற்படி நிதி முதலிடப்பட்டுள்ளது.

## லாப்ஸ் காஸின் ஆரம்ப பொது வழங்கல் நவ.4-ல் ஆரம்பம்

இலங்கையின் பிரபல திரவ பெற்றோலிய வாயு (LP Gas) நிறுவனமான லாப்ஸ் காஸ் லிமிட்டட் தனது 22 வீதமான பங்குகளின் ரூ.2,505 மில்லியன் ஆரம்ப பொது வழங்கல் தொடர்பாக அறிவித்துள்ளது.

75 மில்லியன் வாக்குரிமைப் பங்குகளை தலா ரூ.23 வீதமும், 52 மில்லியன் வாக்குரிமையற்ற பங்குகளை தலா ரூ.15 வீதமும் இந்நிறுவனம் வழங்குகின்றது.

உத்தியோகபூர்வ பங்கு வழங்கல் நவம்பர் 4-ம் திகதி ஆரம்பமாகி நவம்பர் 25ஆம் திகதிவரை (பங்குகள் முடிபடையாவிடின்) தொடர்ச்சியாக நடைபெறும்.

## பார்ட்லீட்-றெலிகெயார் இணைந்து பங்குச்சந்தையில் பிரவேசம்

இலங்கையின் பங்குத் தரகர் நிறுவனங்களில் ஒன்றான பார்ட்லீட் மெலோரி பங்குதரகர்கள் நிறுவனம் இந்தியாவின் நிதிச் சேவை நிறுவனமான றெலிகெயார் நிறுவனத்துடன் இணைந்து இலங்கை பங்குச் சந்தையில் செயற்படவுள்ளது. இதன் பொருட்டு பார்ட்லீட் மெலோரி பங்குத் தரகர் நிறுவனத்தின் 50 சதவீத பங்குகளை றெலிகெயார் நிறுவனம் பொறுப்பேற்றுள்ளதோடு ,றெலிகோ நிறுவனத்துக்கு இடமளிக்கும் வகையில் தன்னுடைய பங்கு மூலதனத்தை அதிகரிக்க பார்ட்லீட் மெலோரி நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இச்செயற்பாடுகள் மூலம் றெலிகெயாரின் உலகளாவிய வங்கி முதலீட்டு வலைப்பின்னல் கொழும்பிலும் ஒருங்கிணைக்கப்படுகிறது. புதிய சந்தைகளை உருவாக்குவதன் மூலமும் லண்டன் பங்குச் சந்தையுடனான தொடர்புகளைப் பேணுவதன் மூலமும், சர்வதேச நிதி முகாமையாளர்களின் கவனத்தை ஈர்த்து இலங்கையில் சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் கம்பனிகளுக்கான புதிய வாய்ப்புகளையும் இது உருவாக்கும் என பார்லீட் டிரான்ஸ் கப்பிட்டல் நிறுவனத் தலைவர் தேசமான்ய ஏ.எஸ்.ஜயவர்தன தெரிவித்தார்.

# தேசிய ஆசிரியர் தர விருத்தி செயற்றிட்டம் அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படும்

## கல்வியமைச்சர் தெரிவிப்பு



சிறார்களின் எதிர்கால நல்வாழ்வைக் கருதி அதற்காக உழைக்கும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சியை வழங்கும் பொருட்டு அடுத்த வருடம் முதல் தேசிய ஆசிரியர் தரவிருத்தி செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தெஹிவளை பிரஸ்லிட்ரியன் தேசிய பாடசாலையில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ,

கல்விக் கொள்கைக்கு உட்பட்டதாக ஆசிரியர்களின் தரத்தினை விருத்தி செய்வதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் சிறந்த பயிற்சிகள் வழங்கப்படும். அத்துடன் மேற்படிப்பக்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இது தவிர ஒரு பிரதேச ஆசிரியரின் சேவையினை மற்றுமொரு பிரதேச மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்காக கிராமப் புற பாடசாலை ஆசிரியர்கள் நகரப்புற பாடசாலைகளுக்கும் நகரப்புற பாடசாலை ஆசிரியர்கள் கிராமப் புறங்களுக்கும் இட மாற்றம் செய்யப்படுவர்.

ஆசிரியர் சேவை ஒரு தொழில் அல்ல அதை தொழிலாக நினைத்து செயற்படுபவர் ஆசிரியராக இருக்கவும் முடியாது. இச் சேவையில் இருந்து கொண்டு போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வேலைப் பகிஷ்கரிப்புக்கள் என்பவற்றை மேற்கொள்ளுவதும் இத் தொழிலின் சிறப்பும் அல்ல.

மாறாக பெற்றோர்கள் மதத் தலைவர்களுக்கு அடுத்தபடியாக பிள்ளைகள் வணங்கி தலைகுனியும் ஒரு சிறப்பு மிக்க நிலையில் உள்ளவர்கள் தான் ஆசிரியர்கள்.

அரச சேவையில் ஆசிரியர் சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரமே இந்தக் கௌரவம் கிடைப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். இத்தகைய சிறப்பைக் கொண்ட ஆசிரியர்கள் தங்களின் தரங்களை விருத்திசெய்து கொண்டு எதிர்கால சந்ததியினரின் வாழ்வை சிறப்பாக்குதற்கு செயற்பட வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# இலங்கை அகதி ஒருவரினால் அவுஸ்திரேலியாவுக்கு அச்சுறுத்தல்

## அவுஸ்.புலனாய்வு அமைப்பு எச்சரிக்கை

கிறிஸ்துமஸ் தீவில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதி ஒருவரினால் அவுஸ்திரேலிய சமூகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என அவுஸ்திரேலிய புலனாய்வு அமைப்பு ஒன்று எச்சரித்துள்ளது.

குறித்த சந்தேகநபர் குறித்து ஆராய்ந்ததாகவும் அதனை தம்மால் உறுதிப்படுத்த முடியும் என அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை தெரிவித்துள்ளதாக" தவீக் எண்ட் ஒஸ்ரேலியா" செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில் அந்த நபருக்கு நிரந்தர வதிவிட அனுமதி அவுஸ்திரேலியாவில் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் ஓசியானிக் வைக்கிங் கப்பலில் இருந்து மீட்கப்பட்ட நால்வராலும் அச்சுறுத்தல் உள்ளதாக இதே புலனாய்வு அமைப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் புலனாய்வு அமைப்பின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நான்கு தமிழர்களும் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வடமாகாண ஆசிரியர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிடின் தொழிற்சங்க நடவடிக்கை

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாண ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தயங்கப் போவதில்லையென இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் வடமாகாண ஆளுநருடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லை யெனவும் இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வடமாகாணக் கல்விப்பணிப்பாளரிடம் வினவிய போது நலன்புரி நிலையங்களில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கு உரிய முறையல் இடமாற்றம் வழங்கப்படுமெனவும் தற்போது இவர்களுக்கான இலவச போக்குவரத்துச் சேவைகள் வழங்கப்படுவதாகவும் அதில் குறைபாடுகள் இருப்பின் எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து ஆசிரியர்களுக்கு சீரான போக்குவரத்துச் சேவையை வழங்கமுடியுமெனத் தாம்எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஸ்ரீ-2)

# போக்குவரத்து சட்டங்களை மீறி பயணிக்கும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு வாகனங்கள்

## சிங்கள ஊடகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ள போதிலும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றமில்லை என சிங்கள ஊடகமொன்றின் ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரமுகர்களின் பாதுகாப்பு வாகனங்கள் இன்னமும் அதே வேகத்தில் அதே விதமாக வீதிப் போக்குவரத்து சட்டங்களை மீறி போக்குவரத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த வாகனமொன்று மோதியதில் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பிரமுகர்களின் வாகனமோ அல்லது பாதுகாப்பு வாகனமோ மோதினால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.பிரமுகர்களின் பாதுகாப்பு வாகனங்களில் மோதுண்டவர்களுக்கு நியாயம் கிட்டிய சந்தர்ப்பங்கள் மிகவும் அரிதானதென தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வாகனங்கள் பாதுகாப்பு பரிவாரங்களும் வீதிச் சட்டங்களை துளியளவும் மதிப்பதில்லை எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சில சாதாரண அமைச்சர்கள் ஜனாதிபதியை விடவும் அதிகளவு பாதுகாப்பு பரிவாரங்களுடன் வேகமாக பாதைகளில் பயணம் செய்கின்றனர்.

வீதிச் சட்டங்களை மீறி அதி வேகமாக போக்குவரத்தில் ஈடுபடுவதன் மூலம் சாதாரண மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றதென்பதனை இந்த அரசியல்வாதிகள் கவனத்திற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது அவசியமானது என்ற போதிலும் அது மற்றவர்களுக்கு இடையூறாக அமையக்கூடாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)




- ❖ 1260 - சார்ட்டேர்ஸ் கதீட்ரல் பிரான்சின் ஒன்பதாம் லூயி மன்னனால் திறந்து வைக்கப்பட்டது.
- ❖ 1260 - எகிப்திய சுல்தான் சாயிஃப் ஆட்டின் குத்தூஸ், பாய்பேர்ஸ் என்பவனால் கொலை செய்யப்பட்டான். பாய்பேர்ஸ் நாட்டின் சுல்தான் ஆனான்.
- ❖ 1795 - போலந்து-லித்துவேனியன் கூட்டமைப்பு முற்றாகக் கலைக்கப்பட்டு ஆஸ்திரியா, பிரஷ்யா, மற்றும் ரஷ்யா ஆகியன தமக்குள் பங்கிட்டுக் கொண்டன.
- ❖ 1801 - மருது பாண்டிய சகோதரர்களும் அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மன்னர் குடும்பத்தாரும் வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்டனர்.
- ❖ 1806 - பிரெஞ்சுப் படைகள் பெர்லின் நகரை அடைந்தன.
- ❖ 1851 - யுரேனஸ் கோளின் சந்திரன்கள் ஏரியல், உம்பிரியல் ஆகியன வில்லியம் லாசெல் என்பவரால் கண்டறியப்பட்டது.
- ❖ 1857 - உலகின் முதலாவது காற்பந்தாட்ட அணியான ஷெஃபீல்ட் காற்பந்தாட்ட அணி இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖ 1912 - முதலாம் பால்க்கன் போர்:குமனோவா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் சேர்பியா வெற்றி பெற்றது.
- ❖ 1917 - ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சி இடம்பெற்றது.
- ❖ 1930 - பிரேசிலில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது. ஜனாதிபதி "லூயிஸ் பெரெய்ரா டெ சவுசா" பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- ❖ 1931 - ஜோர்ஜ் வோஷிங்டன் பாலம் திறக்கப்பட்டது.
- ❖ 1935 - இத்தாலி எதியோப்பியாவைக் கைப்பற்றியது.
- ❖ 1960 - சோவியத் ஒன்றியத்தின் பாய்க் கனூர் விண்தளத்தில் R-16 ஏவுகணை வெடித்ததில் 100 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖ 1964 - வடக்கு றொடீசியா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்று சாம்பியா என்னும் பெயரைப் பெற்றது.
- ❖ 1973 - யோம் கிப்பூர் போர் முடிவுக்கு வந்தது
- ❖ 1994 - கொழும்பில் தேர்தல் கூட்டத்தில் நடந்த குண்டு வெடிப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா மற்றும் 51 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖ 2003 - கொன்கோர்ட் விமானம் தனது கடைசிப் பயணத்தை மேற்கொண்டது.
- ❖ 2007 - சந்திரனின் சுற்றுப்பாதையில் நிலவைச் சுற்றிவரும் முதல் சீன ஆளற்ற விண்கலம் 'சாங்-ஒன்று' தென்மேற்கு சீனாவின் ஏவு தளத்திலிருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது.

### பிறப்புகள்

- ❖ 1957 - இ.ஜெயராஜ், இலங்கை கம்பன் கழக அமைப்பாளர்
- ❖ 1971 - மல்லிகா செராவத், இந்திய நடிகை
- ❖ 1983 - தீபச்செல்வன், ஈழத்து எழுத்தாளர்

### இறப்புகள்

- ❖ 1601 - டைக்கோ பிரா, டேனிய வானியலாளர் (பி. 1546)
- ❖ 1870 - அந்தோனி மரிய கிளாரட், ஸ்பானிய, ரோமன் கத்தோலிக்க மறைப்போதகர் (பி. 1807)
- ❖ 1972 - ஜாக்கி றொபின்சன்,அமெரிக்க பேஸ்பால் விளையாட்டு வீரர் (பி. 1919)
- ❖ 2005 - றோசா பாக்ஸ், ஆபிரிக்க அமெரிக்க குடியுரிமைகள் செயற்பாட்டாளர் (பி. 1913)

**1945 இல் இந்நாளில் தான் ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.**



# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### மண்

உலகத்தில் பிறந்த அனைத்து
உயிரினங்களின் போராட்டம்

*********

### உயிர்

கேள்வி நிரம்பல் சுழிய சந்தையில்
விலை தெரியாத ஒன்று!

*********

### கலாசாரம்

முன்னைய காலங்களில் கலை + சாரம்
என்பது இன்றோ காரசாரமாக உள்ளது

*********

### போதை

உன்னை கொன்று விட்டு
புதைக்கும் புதைகுழி

தர்மலிங்கம் அரவிந்தன்
கோண்டாவில்

### ஆசை

பதவியின் மீது ஆசை
நல்ல பண்பைப் பறித்துவிடும்
பணத்தின்மீது ஆசை
பிணத்தையும் வில்லபேசும்
மண்ணின் மீது ஆசை
உடன்பிறப்பிற்கு
எல்லை போடும்
பொன்னின் மீது ஆசை
பிறர்பால் அன்பையும்
அகற்றிவிடும்
பெண்ணின் மீது ஆசை
உன் உறக்கத்தை
தொலைத்துவிடும்
கருவறையில் பிறந்தோருக்கு
கல்லறைதான் முடிவு
இடைவழியில் ஏன் இந்த ஆசை

அ.அஜந்தன்
கந்தர்மடம்

### கடவுள்

கடவுள்கள் மீதான நம்பிக்கைகள்
அற்றுப் போய்விடுகின்ற வேளைகளில்
எம்மை மீறிய ஓர் சக்தி
தன்னை கடவுள் என
அடையாளப்படுத்திவிட்டுச் செல்கிறது

அது இயற்கையின் உருவாய்
சுனாமியாகவோ
சூறாவளியாகவோ
வெள்ளப் பெருக்காகவோ
இருந்துவிடுகிறது

சிலவேளைகளில் அது
ஒளிப்படங்களாய்
காணொலிகளாய்

சனல் 4 ஆகக் கூட தன்னை
கடவுள் என
அடையாளப்படுத்திவிட்டுச் செல்கிறது

அப்போது கடவுள்கள் மீதான நம்பிக்கை
மீண்டும் மெல்ல துளிர்விட ஆரம்பிக்கிறது.

கலியுகன்

### காத்திருப்பு

தண்ணீரில் கரைகின்ற
உப்பாய்...
தினம் தினம்
கண்ணீரில் கரைகின்றேன்
என் காதலுக்காய்...
பெற்றவருக்கு நடுவினிலே
நான் மெழுகாய் உருகி
தவிக்கிறேன்
தென்றலே என் காதலனிடம்
போய் சொல்வாயா...
காத்திருக்கிறாள் இவள்
உனக்காகவென்று

நிஷா
அச்சுவேலி



### இமயம் தொட...


சிரித்து வாழப்பழகு
அது உன்னையும் சூழலையும்
ஆரோக்கியமாக்கும்
உன் சிரிப்பால்
பிறர் இதயம் நோகுமெனில்
நீ சிரிப்பதில் பயனில்லை
பிறர் சிரிக்கும்போது
நீ சிரிப்பதைவிட
அழும்போது ஆறுதலாயிரு
அதுதான் வாழ்க்கை

மாவை. நா.கஜேந்திரா

### என்னென்று சொல்வேன்!

தங்கமுத்து தப்பினன் பிளைத்தேனெண்டோட
சிங்கமுத்து வந்து சிரமப்படுவதேனோ?
தங்கமான மண்ணையிழந்து உறவை
இழந்து உடையவன் தவித்து
தங்களூரில் கால்வைக்க முடியாது
அயலூரில் தங்கியிருக்க
எங்கிருந்தோ உறவு சொல்லி வந்திருக்கும்
எங்கள் சிங்கமுத்தை என்னென்று சொல்வேன்!

பா.பாலச்சந்திரன்
வெள்ளியங்கிரி



## மௌனத்தின் தேடல் - 41

### சிறைக்குள்ளே

சிட்டுக்குருவிகள் என
சிறகடித்துக் கற்றோம்
சிறையிலே அடைத்தார்கள்
சிறகை உடைத்து
வாழ்வோ சாவோ
இனி கூட்டினுள்தான்..

இ.நர்மதன்
யா/பொன்னம்பல வித்தியாலயம். கரணவாய்

### சுதந்திரமற்ற கல்வி

எம் சொந்த மண்ணிலே
காலவரையற்ற கல்விக்கு
சுதந்திரமில்லாத காவலா?
கொடுமையிலும் கொடுமை
காவலாயிருக்கும் காவாலிகள் கூட
எம் கற்பை விலை பேசுகிறார்கள்
பொறுத்திருந்து பார்ப்போம்
உலகம் விடியுமா என

இரத்தினம் தர்சன்
கரணவாய்

### விதி எழுதிச் செல்லும்...!

அறிவுக்கான கல்வி
ஆயுத நிழலிலே..
காகிதாதிகள்
கையிலுண்டு
காணாமல் போனது
விடைகள் மட்டுமே!
விடைகள் யாவும்
விதியின் கையிலே...

பாத்திமா றிஸ்லியா
பலாலி ஆசிரியர் கலாசாலை

### கைதிகளா?

சிந்தனைகள் சிறகடிக்கும்
போதெல்லாம்
சிறைப்பிடிக்கப் படுகிறோம்
துப்பாக்கி முனைகளில்
நாங்கள் என்ன ???

கே.குணாளினி
சங்கானை

நல்ல தமிழ் வல்லவர்கள்
வல்ல திறமை கொண்டிருந்தால்
எங்கள் பள்ளிச் செல்வங்கள்
ஏன் இந்த தெருவினிலே...

கி.ரம்யா
தாவடி

### அன்புக்காய்

அன்னை தந்தை அன்புக்காய்
அங்கலாய்த்துத் துடிக்கும் எம் மனதுக்கு
புனர்வாழ்வு என்ற போர்வைக்குள் நடக்கும்
புத்தகப் பாடங்களால்
புதுவாழ்வு கிடைத்திடுமா?

சு.பிரதீப்
வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்

மூக்கில் விரல்வைத்து
யோசித்தது போதும்
துணிந்து எழுது
எண்ணங்கள் ஈடேறும்
யார் நீ எனக்காட்டு
இந்தநிலை மாறும்

மானந்தன்
அல்வை

### சிந்திக்க

திறந்த வெளியில்
காவலின் மத்தியில்
கன்னியர் சிந்தனை
காணவா! இறைவா?

தாத்திரி
மயிலிட்டி

கால் விலங்குடன் கல்வி என்று
தமிழச்சி நீயும் தளராதே
காலமது எமை வாழ்த்தும் போது
கனவது பலிக்கும் நிச்சயம்

செல்வராசா கவிந்தன்
முள்ளியவளை

முடிந்ததா?
இல்லை!
மையலே
மைகொண்டு யோசி
இனியும்
இமையாமல்

அ.வசந்தன்
அல்வாய்

### பாதுகாப்பு

என்ன இது
கட்சி விட்டு கட்சி
தாவும் எங்கள்
அரசியல் வாதிகளுக்குத்
தான் பாதுகாப்பு
என்றால் இப்போது
கல்விகற்கும்
எமக்குமா பாதுகாப்பு

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

### அகதி வாழ்க்கை

படையினரின் காவலில் படிப்பு
அகதி முகாமில் வாழ்க்கை
ஐ.நாவிடம் கையேந்தி நிவாரணம்
தமிழனுக்கு ஏன் இந்த அவலம்

சி.டனுசயன்
வட்டக்கச்சி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 42



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 29.10.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.


-ஆசிரியர் -

# அரசுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவோர் சிறைத்தண்டனை அனுபவிக்க தயாராக வேண்டும்

## முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக கருத்துக்களை



வெளியிடுவோர் சிறைத்தண்டனை அனுபவிக்க தயாராக இருக்கவேண்டும் என பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாகவும் இதனால் வெள்ளைத்தேசிய உடைக்கு பதிலாக தற்போது கறுப்பு நிற ஆடைகளை அணிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அபிவிருத்தித்திட்டங்கள் மூலம் சாதாரண பொதுமக்களுக்கு எவ்வித நன்மைகளும் கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். மக்கள் பாண் நுகரக் கூடாது என எவரும் பலவந்தப்படுத்தக்கூடாது எனவும் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப உணவை உட்கொள்ளும் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சரத்பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான மகஜரில் சரத் என் சில்வா கைச்சாத்திடவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த மகஜரில் ஏற்கனவே ,ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் கையொப்பமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பாடசாலை சிற்றுண்டிச் சாலைகளில் உடன்உணவு,பானங்கள் விற்கத்தடை

## மாணவர் நலன் கருதி நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகள், பிரத்தியேக வகுப்புக்களை நடாத்தும் நிறுவனங்கள் என்பவற்றில் இருக்கும் சிற்றுண்டிச் சாலைகளில் உடன் உணவு (Fast food) இனிப்பு பானங்கள் ஆகியவற்றின் விற்பனை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தடை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட சுற்று நிருபம் உடனடியாக சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பாடசாலை சிற்றுண்டிச்சாலைகள் சட்டத்தின் கீழ் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை முழுமையாக நடை முறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கும் பதில் சுகாதார அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது ஏற்பட்டுள்ள இணக்கப்பாட்டுக்கு ஏற்ப பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் உடன் உணவு இனிப்பு பானங்கள் என்பவற்றின் விற்பனை உட னடியாகத் தடை செய்யப் பட விருக்கின்றது.

ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளசுற்றறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கும் உணவுப்பொருட்களும் பானங்களும் மாத்திரமே பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையில்விற்பனை செய்வதற்கும் அனுமதியளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தின் கீழ் பாடசாலைச் சிற்றுண் டிச்சாலைகளில் விற்பனைசெய்யப்படும் உணவுப் பொருட்கள், பானங்கள் தொடர்பாகவும் அவற்றின் தரம் குறித்தும் சுகாதார அமைச்சின் பொது சுகாதார அதிகாரிகள் சோதனைகளை அவ்வப் போது மேற்கொள்ளவுள்ளனர். பாடசாலை மாணவர்கள் மத்தியில் எலும்பு பலவீனம், நீரிழிவு, கண் நோய்கள், உடல் பருமன் உட்பட பல தொற்று நோய்கள் பெரி தும் அதிகரித்துள்ளன. இது சுகாதாரத்துறை யினரின் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இந்நாட்டின் எதிர்காலச் சந்ததியினரின் ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கிலேயே சுகாதார அமைச்சு இந்த நடவடிக்கைக்குப் பங்களிப்பு செய்யவிருப்ப தாக அமைச்சின் அதிகாரியொருவர் கூறினார்.

காலை உணவை உட்கொள்ளாமல் உடன் உணவு வகைகளையும் இனிப்பு பானங்களையும் உட்கொள்வதற்கு பெரும்பாலான மாணவர்கள் பழக் கப்பட்டுள்ளார்கள். இவர்கள் மத்தியில் போஷாக்கின்மையும் நீரிழிவும், உடல் பருமனும் பெரிதும் அவதானிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

போஷாக்குமிக்க உள்ளூர் உணவுப்பொருட்களை உண்பதற்கு எமது மாணவ சமூகத்தைப் பழக்கிக்கொள்ளும் போது தொற்று நோய்கள் பலவற்றிலிருந்து அவர்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமென பதில் சுகாதார அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.(ஸ்ரீ-2)

# மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்து அரசே தீர்மானிக்கவேண்டும்

## கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்து மத்திய அரசாங்கமே தீர்மானிக்க வேண்டுமென கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நடத்திய சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அச் சுறுத்தல் காரணமாக கடந்த காலங்களில் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு இதன் மூலம் அநீதி இழைக்கப்பட்டதாக கருதப்பட முடியாது எனவும் பொது நிர்வாக நடவடிக்கைகளுக்கு தமிழ் பேசும் அதிகாரிகள் இணைக்கப்பட் டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆளுனர் அலுவலகத்தில் அதிகளவானவர்கள் தமிழர்கள் எனவும் அவர்கள் தமிழ் மொழியில் கடமையாற்றி வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்கப்படுவதில்லை என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இடம்பெயர் மக்கள் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

அருணாசலம் சோமசுந்தரம்

யாழ்.மாநகராட்சி மன்ற முதல்வரின் தந்தையாரின் மரணச் செய்தி கேட்டு ஜனசக்தி சமூகமே அதிர்ந்தது. அவரின் பிரிவை தாங்க முடியவில்லை. பல பட்டங்களை தன்னுள் சுமந்து சங்கீதமே தன் வாழ்க்கை என்று எண்ணி இன்று விண்ணுலகை அடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி

அரசடி வீதி,
நல்லூர்.

உம் பிரிவால் துயருறும்
ஜனசக்தி சன சமூக நிலையத்தினர்.

(2722)

# ஈழத் தமிழ்ப் போராளிகளை...

09ஆம் பக்கத் தொடர்ச்சி...

இதற்கு பதிலடியாகத்தான் புலிகளின் தாக்குதல் நடந்தது. போராளிகளுக்கு இடையிலான மோதலுக்கு உண்மையான காரணம் 'றோ' உளவுத்துறைதான் என்பதை கருணாநிதி ஆரம்பம் முதலே மறைத்துப் பேசுகிறார்.

தமிழகத்தில் அனைத்துப் போராளி இயக்கங்களும் இயங்கிய போது கூட அவர்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்த முயன்றது கருணாநிதிதான். எம்.ஜி.ஆர்.முதலமைச்சராக இருந்தபோது 1983 ஜுலையில்

எல்லா போராளிக்குழுக்களின் தலைவர்களையும் அழைத்து ஒற்றுமையை உண்டாக்க முனைந்தார். இந்தக் தகவலை அறிந்ததும், அது வரை போராளிக் குழுவினரை சந்திப்பதைத் தவிர்த்து வந்த கருணாநிதி,எம்.ஜி.ஆரை சந்திப்பதற்கு முந்தைய நாளில் தன்னை வந்து சந்திக்குமாறு போராளித் தலைவர்களை அழைத்தார். அவரது அழைப்பை ஏற்று, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்.,ஈரோஸ் குழுவினர் சென்றனர். அந்த சந்திப்பைப் பற்றி பத்திரிகைகளுக்கு அறிவித்து விளம்பரமும் தேடிக்கொண்டார் கருணாநிதி. ஆனால்,முதலில் அழைத்த எம்.ஜி.ஆரை புலிகள் மட்டுமே திட்டமிட்ட படி சந்தித்தனர்.

ஆக,தமிழ்நாட்டில் தி.மு.கவுக்கும் அ.தி.மு.க-வுக்கும் இடையிலான போட்டா போட்டியில் போராளி இயக்கங்களைப் பிளவுபடுத்தியவர் கருணாநிதிதான். பல முறை தனது கட்சிக் கண்ணோட்டத்தில் ஈழத் தமிழர்களைப் பிளவுபடுத்தியவரும் இவரேதான் தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் போலியான காரணங்களை இப்போது தேடிப் பிடிக்கிறார் அவர். போராளிகளின் சகோதரச் சண்டையை ஒரு குற்றமாகவும் காரணமாகவும் சொல்லும் இவர், முதலில் தன் குடும்பத்தில் நடக்கும் சகோரதச் சண்டையை நிறுத்திக் காட்டட்டுமே!"

**ஊட்டி குளிரில் சூடான விவாதம்**

"தடை செய்த நாட்டில்தான் தமிழீழம் கருவானது!"

புலிகள் மீதான தடையை நீடிப்பது குறித்து விவாதிக்க டில்லி, சென்னையை அடுத்து... ஊட்டியில் 'தமிழகம் மாளிகையில் நடந்தது நீதிபதி விக்ரம்ஜித் சென் விசாரணை! அரசுத் தரப்பின் இரண்டாவது சாட்சியாக இருக்கும் மத்திய உள்துறை அமைச்சகத்தின் உளவுத்துறைப் பிரிவு இயக்குநர் மிஸ்ரா, நீதிபதி முன் சில விடயங்களை முன்வைத்தார்.

"நாடு கடந்த தமிழீழ அரசு என்ற அமைப்பு புலம்பெயர்ந்த தமிழர்களால் அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள தமிழர்கள் இதில் பங்கேற்று தேர்தலும் நடந்துள்ளது. விடுதலைப்புலிகளின் மிதவாதப் பிரிவினர் இதை ஆதரிக்கிறார்கள். இப்படி இருக்கும் போது, புலிகள் மீதான தடையை இந்தியா நீக்க முடியாது. நாம் தடை செய்ய இது தான் முக்கியமான காரணம்!" என்று சொன்னர் மிஸ்ரர்.

வைகோவை குறுக்கு விசாரணைக்கு அழைத்தார் நீதிபதி. "நாடு கடந்த தமிழீழ அரசு அமைக்க ஏற்பாடு செய்தவர்கள் வாழும் நாட்டில் எல்லாம் விடுகலைப் பலிகள் யெக்கம் கடை செய்யப்பட்டு உள்ளதை அரசுத் தரப்பு சாட்சி அறிவராரா?" என்று வைகோ கேட்க,

"அமெரிக்காவிலும்,ஐரோப்பிய பகுதிகளும் இந்த இயக்கம் தடை செய்யப்பட்டு இருக்கிறது. மற்ற நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு மிகச் சரியாகப் தெரியவில்லை!" என்றார் மிஸ்ரா.

சட்டென்று நிமிர்ந்த வைகோ "புலிகள் இயக்கம் அமெரிக்காவில் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் அமெரிக்காவின் எல்லைக்குட்பட்ட ஃபிலடெல்பியா மாகாணத்தில், நாடு கடந்த தமிழீழ அரசு நடத்திய தொடக்க விழா நடத்த அமெரிக்க அரசாங்கமோ அல்லது அந்நாட்டு காவல் துறையோ எந்தத் தடையும் போடவில்லை, எந்த இடையூறும் செய்யவில்லை.இது தெரியுமா?"என்று கேட்டார். இதற்கு, "தெரியாது" என்று மிஸ்ரா கூறினார்.

இந்த வாதப்பிரதிவாதங்களை பதிவு செய்த நீதிபதி வழக்கின் அடுத்த கட்ட விசாரணை எதிர்வரும் 28 ஆம் திகதியன்று சென்னையில் நடக்குமென்று அறிவித்தார்.

இரா. தமிழ்க்கனல்



வலிமேற்கு பிரதேசசபையினால் நடத்தப்பட்ட "உலக ஆசிரியர் தினவிழாவும் பிரதேச எழுத்தாளர் கௌரவிப்பும்" நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகனேசன் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற பிரதி நில அளவையாளர் நாயகம் லயன் ச.கனகராசன் தம்பதிகள் கௌரவிக்கப்படுவதையும் சிறப்பு விருந்தினர் பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

### ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு

## 11 நிமிடத்தில் 11 இலட்சம் மரக்கன்றுகளை நடுவதற்கு சுற்றாடல் அமைச்சு நடவடிக்கை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினம் மற்றும் பதவியேற்புத் தினத்தை முன்னிட்டு 11 நிமிடங்களுக்குள் 11 இலட்சம் மரக்கன்றுகளை நடுவதற்குச் சுற்றாடல் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை சுற்றாடல் அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி யன்று நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ள தாகவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந் தது 50 ஆயிரம் மரக்கன்றுகளை நடுவதற் குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## இலங்கை அகதிகள் 67 பேர் நாடு திரும்பியுள்ளனர்

(கொழும்பு)

இந்திய முகாம்களில் தங்கியிருந்த 67 இலங்கைத் தமிழர்கள் மீண்டும் கடந்த இரண்டு நாட்களில் நாடு திரும்பியுள்ளனர். இந்தத் தகவலை ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் உயர்ஸ்தானிகரம் வெளியிட்டுள் ளது.

இவ்வாறு வருகை தந்தவர்களில் பெண்களும் சிறுவர்களுமே அதிகளவில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2008. ஆம் மற்றும் 2009 ஆண்டுகளில் மீனவப் படகுகள் மூலம் இந்தியா சென்றடைந்துள்ளனர். இலங்கை யின் பாதுகாப்பு நடவடிக்கைகள் உரிய முறையில் காணப்படுவதன் காரணமாகவே தாங்கள் மீண்டும் தாய்நாட்டிற்கு வருகை தந்ததாக அந்த மக்கள் தெரிவித்துள்ள னர். (ஸ்ரீ-2)

## கட்டாரிலும் இலங்கை தொழிலாளர்கள் தொழில் வாய்ப்பை இழக்கும் அபாயம்!

(கொழும்பு)

தூதுவராலயத்தின் நடவடிக்கைகளால் இலங்கையர்களுக்கு கட்டாரிலும் தொழில் வாய்ப்புக்கள் இழந்து போகக் கூடிய அபா யம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டாருக்கான இலங்கை தூதுவராலய அதிகாரிகளின் நடவடிக்கைகளினால் தொழி லாளர்கள் பாதிக்கப்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்காக தனித்தனி ஒப்பந்தங்களை வழங்கும் நடைமுறைக்கு அந் நாட்டு தொழில் கொள்வோர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதுவரை காலமும் ஒரே தடவையில் தொழில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே, இலங்கையர்களை விடவும் நேபாளம், இந்தோனேஷியா, பங்களாதேஷ் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலி ருந்து தொழிலாளர்களை ஒப்பந்தம் செய்து கொள்ள கட்டார் தொழில் கொள்வோர் நாட்டம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டாரில் இரண்டு இலட்சத்திற்கும் அதிக மான இலங்கையர்கள் தொழில்களில் ஈடு பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கட்டாருக்கான இலங்கைத் தூதுவருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றிய ளிக்கவில்லை என அந்நாட்டு தொழில் முகவர் நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ள துடன் இதுவரை காலமும் மாதாந்தம் 3 ஆயிரம் தொழிலாளர்கள் கட்டாருக்கு சென்ற போதிலும் தற்போது அந்த எண்ணிக்கை 500 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

பெருமளவு ஆண் தொழிலாளர்களுக் கான வாய்ப்புக்கள் இல்லாமல் போகக் கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ஸ்ரீ-2)

## 30 மில்லியன் ரூபா பெறுமதியான சட்டவிரோத சிகரெட்டுக்கள் சிக்கின!

### கோடீஸ்வர வர்த்தகர் உட்பட நால்வர் கைது

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய் யப்பட்ட 30 மில்லியன் ரூபாய்க்கும் அதிக மான பெறுமதி உடைய பெரும் தொகை சட்ட விரோத சிகரெட்டுக்கள் கொழும்பின் புற நகர்ப் பகுதியான சீதுவ பிரதேசத்தில் வைத்து போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸா ராலும், மதுவரி திணைக்கள உத்தி யோகத் தர்களாலும் நேற்று கைப்பற்றப்பட்டன.

இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படை யில் இவர்கள் தேடுதல் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டபோது ஆடம்பரக் கார் ஒன்றுக் குள் வைத்து கோல்ட் சீல், கோல்ட் லீப் ஆகிய ரகங்களைச் சேர்ந்த சட்டவிரோத சிகரெட் கட்டுக்களைக் கண்டுபிடித்தனர்.

ஆடம்பரக் காரின் உரிமையாளரான கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரும் அவருடன் கூட வந்திருந்த நால்வரும் கைது செய்யப் பட்டுள்ளனர். இவ் ஆடம்பரக் கார் பொலிஸா ரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வதிரடி நடவடிக்கையில் ஈடுபட்ட மது வரி திணைக்கள உத்தியோகத்தர் குழுவுக்கு மதுவரி அத்தியட்சகர் பிரபத் ஜயவிக்கிரம தலைமை தாங்கினார்.

இச் சட்டவிரோத சிகரெட்டுக்கள் சந்தைக்கு விடப்பட்டு இருந்தால் இவற்றை போலியா னவை என்று கண்டுபிடிக்கின்றமை மிகவும் கடினமாக இருந்திருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## மெக்சிக்கோ நகரின் தலைமை பொலிஸ் அதிகாரியாக 20 வயது மாணவி நியமனம்

20 வயதேயான குற்றவியல் படிப்பு படித்து வரும் மாரிசால் வாலஸ் கார்சியா என்ற மாணவி வன்முறைக்கு பெயர் போன மெக்சிக் கோவின் குவாடலுப் டிஸ்ட்ரிடோ பிராவோ நகரின் தலைமை காவல் அதிகாரி யாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பதவிக்கு விண்ணப்பித்த ஒரே நபர் இவர் தான். இந்தத் தகவலை மெக்சிக் கோ ஊடகம் தெரிவித்துள்ளது. மாரிசால் வாலஸ் கார்சியா கடந்த திங்கட் கிழமை அன்று அமெரிக்க எல்லையில் இருக் கும் இந்நகரின் பாதுகாப்பு அதிகாரி யாக பொறுப்பேற்றார்.

இந்நகரின் மக்கள் தொகை வெறும் 10ஆயிரம்தான். ஆனால் மெக்சிக்கோவில் இருக்கும் நகரங்களிலேயே இந்நகரம் தான் வன்முறை அதிகம் நடக்கும் இடம் ஆகும். இது சியுடாட் ஜுவாரஸில் இருந்து கிழக்கில் 80 கி.மீ.தொலைவில் அமைந்துள்ளது.

இதன் முன்னாள் மேயர் ஜீசஸ் மானுவல் லாரா ரோட்ரிகஸ் கடந்த ஜுன் 19ஆம்திகதி சியுடாட் ஜுவாரஸில் உள்ள அவரது வீட்டி லேயே கொலை செய்யப்பட்டு இறந்தார்.

பொலிஸ் தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ளது குறித்து வாலஸ் கார்சியா கூறுகையில்,

போதைப் பொருட்கள் கும்பலை எதிர்த்து நான் போராடப்போவதில்லை. அதை மற்ற அதிகாரிகள் கவனித்துக்கொள்வார்கள். மாறாக மக்களையும், பள்ளிகளையும் காப்பது தான் என்கடமை. மேலும் அபகரிக் கப்பட்டுள்ள இடங் களை மீட்டு உரியவர் களிடம் கொடுப் பதும் என் கடமை என்று அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## சட்டவிரோத மின்சாரம், வீதி மின் விளக்குகளால் வருடமொன்றிற்கு ஆயிரம் கோடி ரூபா நட்டம்

### மின்சக்தி எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

மின்சாரத் தை சட்டவிரோ தமாக பெற் றுக் கொள் வது மற்றும் வீதிமின் விளக் குகளினால் ஒரு வருடத்திற்கு சுமார் 1000 கோடி ரூபா இலங்கை மின்சார சபைக்கு நட்டம் மேற்படுவதாக மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சு சம்பிக்க ரணவக்க தெரி வித்துள்ளார்.

வடக்கு -கிழக்கில் கடந்த காலங்களில் திருட்டுத்தனமான மின்பாவனை அதிக ரித்துக் காணப்பட்டதாகவும் அதுதற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளதாவது, சட்டவிரோத மின்பாவனையால் வருடமொன் றுக்கு 700 கோடி ரூபா நட்டத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளதுடன் வீதி மின் விளக் குகளால் 300 கோடி ரூபாவை மின்சார சபை இழக்கவேண்டியும் உள்ளது.

மின்சார விநியோக வயர்களில் கொக் கிகளைக் கொளுவி மின்சாரம் பெறப்படுகிற தோடு, மீற்றர்களிலும் குளறுபடி செய்யப்படு கிறது.

மின்சார சட்டத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக மீற்றர் பரீட்சிப்பு தொடர்பில் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள் ளது.

எனவே, இச்சட்டம் திருத்தப்படவுள்ளது. கடந்த காலங்களில் வடக்கு – கிழக்கில் அதிக மான சட்டவிரோத மின்சார பாவனை இருந் தது.

இந்நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

சட்டவிரோத மின்பாவனையைத் தடுப் பதற்காக சுற்றிவளைப்பு தேடுதல்கள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

வீதி மின் விளக்குகளுக்கான கட்டணங் களை உள்ளூராட்சி சபைகள் செலுத்தாத தால் மின்சார சபைக்கு பாரிய நட்டம் ஏற்பட் டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஈராக்கில் இடம்பெற்ற சித்திரவதை சம்பவங்களை அமெரிக்கா உதாசீனம்

## விக்கிலீக்ஸ் இணையத்தளம் குற்றச்சாட்டு

ஈராக்கில் இடம்பெற்ற சித்திரவதை சம்பவங்களை அமெரிக்க அதிகாரிகள் உதாசீனம் செய்துள்ளதாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்க இராணுவத்தின் 4 இலட்சம் இரகசிய ஆவணங்களை விக்கிலீக்ஸ் அண்மையில் அம்பலப்படுத்தியுள்ளது.

ஈராக்கிய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதை சம்பவங்கள் குறித்த தகவல்களை அமெரிக்க உயர் இராணுவ அதிகாரிகள் உதாசீனம் செய்துள்ளதாக விக்கிலீக்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டின் பின்னர் அமெரிக்க சோதனைச் சாவடிகளில் நூற்றுக் கணக்கான ஈராக் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் உயிரிழப்பு தொடர்பான தகவல்களை அமெரிக்கா இரகசியமாக பேணி வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளது.

போராட்டங்களின் போது கொல்லப்பட்ட 10 இலட்சத்து 90 ஆயிரம் பேரில் 66 ஆயிரத்து 81 பேர் பொதுமக்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை விக்கிலீக்சின் குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

40 சட்டவிரோத படுகொலைச் சம்பவங்கள் தொடர்பில் பிரித்தானிய சட்டத் தரணிகளின் மூலம் வழக்குத் தாக்கல் செய்ய உள்ளதாக விக்கிலீக்ஸின் உரிமையாளர் அல் ஜசீரா ஊடகத்திற்கு அறிவித்துள்ளார்.

ஈராக்கிய அதிகாரிகளினால் ஈராக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் பல்வேறு வழிகளில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான தகவல்களை வெளியிடுவதன் மூலம் அமெரிக்க துருப்பினருக்கு பாதகமான நிலைமை ஏற்படலாம் என அமெரிக்க பாதுகாப்புத் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் தரவுகளை இணையத்திலிருந்து நீக்கிவிடுமாறு விக்கிலீக்ஸ் இணையத்திடம் மீளவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

# காஷ்மீர் விவகாரத்தில் தலையிடமாட்டோம்

## அமெரிக்கா திட்டவட்டம்

(வோஷிங்டன்)

காஷ்மீர் விவகாரத்தில் தலையிட வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அமெரிக்கா மீண்டும் திட்டவட்டமாக தெரிவித்து விட்டது.

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண அமெரிக்கா உதவ வேண்டும் என்று பாகிஸ்தான் புதிதாக விடுத்த கோரிக்கையையும் நிராகரித்து விட்டது. அமெரிக்க-பாகிஸ்தான் இரு தரப்பு உறவு குறித்த பேச்சுவார்த்தையில் பங்கேற்க அமெரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மெஹ்மூத் கோரிக்கை விடுத்தார்.

தெற்காசிய பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மை ஏற்பட அமெரிக்கா தீவிரமாகப் பாடுபட்டு வருகிறது. காஷ்மீர் பிரச்சினைக்குத் தீ[illegible]ண வேண்டும் என்பதிலும் முனைப்பாக [illegible]து என்று குரேஷி கூறியிருந்தார். காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்கா தலையிட்டு வருவது போல் குரேஷியின் பேச்சு அமைந்திருந்தது.

இது இந்தியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. குரேஷியின் கருத்து குறித்து அமெரிக்கா என்ன சொல்கிறது என்பதை அறிய விரும்பியது. இந்நிலையில் கடந்த 21 ஆம் திகதி செய்தியாளர்களை சந்தித்த அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் பி.ஜே.குரோவ்லே , குரேஷி சொல்வது போல் காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்கா தலையிடவில்லை. தலையிட வும் விரும்ப வில்லை.

காஷ்மீர் பிரச்சினை என்பது இந்திய-பாகிஸ்தான் இடையேயான பிரச்சினையாகவே ஆரம்பத்தில் இருந்து அமெரிக்கா கருதுகிறது. இதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

காஷ்மீர் பிரச்சினையை இரு நாடுகளும் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றே அமெரிக்கா விரும்புகிறது. காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்கா தலையிட வேண்டும் என்று இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு நாடுக ளும் இணைந்து கோரிக்கையை முன் வைக்கவில்லை. இதனால் அந்த விவகாரத்தில் அமெரிக்கா தலையிடும் பேச்சுக்கு இடமில்லை என்றார். (ஶ்ரீ-2)

# பாகிஸ்தான் மசூதியில் குண்டுவெடிப்பு 3 பேர் பலி; 20 பேர் படுகாயம்

(பெஷாவர்)

பாகிஸ்தானின் பெஷாவர் பகுதியில் உள்ள மசூதியில் குண்டு வெடித்ததில் மூன்று பேர் பலியாகியதுடன் 20 பேர் படுகாயமடைந்தனர்.

பாகிஸ்தானின் பெஷாவரில் பிஷ்தக்காரா என்ற இடத்தில் உள்ள மசூதியில் நேற்று முன்தினம் தொழுகை நடைபெற்றது. இந்த மசூதியில் ஒன்றரை கிலோ எடை கொண்ட வெடி குண்டு வெடித்ததில் மூன்று பேர் உடல் சிதறி பலியாயினர்;20 பேர் படுகாயமடைந்தனர். பயங்கரவாதிகளுக்கு எதிராக இராணுவம் மேற்கொண்டுள்ள நடவடிக் கையை எதிர்த்து இந்த வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கைபர் பக்துன் கவா மாகாண அமைச்சர் மியான் இப்திகார் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

இந்த குண்டு வெடிப்புக்கு இதுவரை எந்த பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (ஶ்ரீ-2)

# சந்திரனில் போதியளவு குடிநீர் உள்ளது

## நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(நியூயோர்க்)

கடந்த ஆண்டு சந்திரன் குறித்த ஆய்வை அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் மேற்கொண்ட போது அங்கு மண் மற்றும் மேற்பரப்பில்5 சதவீதம் அளவுக்கு ஐஸ்கட்டி படிவங்கள் இருப்பதாக கண்டுபிடித்தனர்.

அதை வைத்து சந்திரனில் போதிய தண்ணீர் உள்ளதா? என ஆய்வு மேற்கொண்டனர்.

சந்திரனின் ஒரு தொன் பாறையிலிருந்து 13 கலன்கள் அளவு தண்ணீர் கிடைக்க வாய்ப்பு உள்ளது என கண்டறிந்துள்ளனர். அந்தத் தண்ணீரை சுத்திகரித்தால் குடிநீராக பயன்படுத்த முடியும் என கண்டுபிடித்துள்ளனர்.

மேலும் அதை ஐதரசன் மற்றும் ஒட்சிசனாக பிரித்து ரொக்கெட்டுக்கு எரிபொருளாகவும் பயன்படுத்தலாம். இந்த தண்ணீரை வீட்டுக்கும் எடுத்துச் செல்லலாம். செவ்வாய் கிரகத்துக்கு ஆய்வுக்கு செல்லும் விண்வெளி வீரர்களும் பயன்படுத்த முடியும்.

இதன் மூலம் சந்திரனில் போதிய அளவு குடிநீர் உள்ளது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ஶ்ரீ-2)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் அருணாசலம் சோமசுந்தரம்



(சங்கீத பூஷணம், கலா பூஷணம், பண்ணிசைமணி, இசையரசு, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர்- முன்னாள் இளைப்பாறிய ஆசிரியர் யா/வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், யா/ இடைக்காடு மகாவித்தியாலயம், யா/ கனகரத்தினம் மகாவித்தியாலயம்)

யாழ். மாநகர முதல்வர் திருமதி பற்குணராசா யோகேஸ்வரி அவர்களின் அன்புத் தந்தையார் அருணாசலம் சோமசுந்தரம் அவர்கள் கடந்த 20.10.2010 புதன்கிழமை அன்று மரணமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். பஸ் நிலைய கடை உரிமையாளர்கள்:-
தயாளன் தனுசியா கூல்பார்-T.முரளி
றோயல் கோப்பி சென்ரர் -M.இராசதுரை
மகாலிங்கம் கூல்பார்- S.மகாலிங்கம்
ஶ்ரீராம் கஜன் மிக்சர்- இ.ராசு

(2729)



கிளிநொச்சி கலைமகள் வித்தியாலய மாணவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து பாடசாலை புத்தகங்களையும் விளையாட்டு உபகரணங்களையும் வழங்கினர். இந்நிகழ்வைப் படங்களில் காணலாம்.
(படங்கள்:-என்.குமார்)

## முத்தமிழ் சங்கமம் இறுதிநாள் நிகழ்வுகள்

திருமறைக் கலாமன்றம் நடத்தும் முத்தமிழ்ச்சங்கம நிகழ்வின், இறுதிநாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இறுதி நாள் நிகழ்வுக்கு, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சூ.சொலமன் சிறில் தலைமை தாங்குகின்றார். பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் மற்றும் சிறப்பு விருந்தினராக, தீவகவலய கிறிஸ்தவபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருஞானம் யோண்குயின்ரஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் திருமறைக் கலாமன்றம் நடத்திய நாடகபோட்டிகளில் பங்குகொண்டோருக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. தொடர்ந்து நடன நிகழ்வுகளும் "மழை நின்றும்" என்னும் நவீன குறுநாடகமும் சிறப்பு நிகழ்வாக திருமறைக் கலாமன்றம் தயாரித்து மேடையேற்றி பலராலும் பாராட்டப்பட்ட கூத்துருவ நாடகமாகிய "அற்றைத் திங்கள்" நாடகமும் மேடையேற்றப்படவுள்ளன. (ஸ்ரீ)

## சீமானின் வழக்கு விசாரணை அடுத்த வாரம்வரை ஒத்திவைப்பு

இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாகத் திரைப்பட இயக்குனர் சீமான் கடந்த ஜூலை மாதம் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். இதனை எதிர்த்து சீமானின் சகோதரர் ஜேம்ஸ் பீற்றர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

பொலிஸ் கமிஷனர் சார்பாக அரச சட்டத்தரணி பாபு முத்துமீரான் ஆஜராகி தாக்கல் செய்த மனுவில் சீமானை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தது சரியானது தான். அவரை விடுதலை செய்யக்கூடாது. எனவே சீமான் மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும். என்றார்.

இவ்வழக்கு விசாரணை அடுத்த வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

## பக்தர்களின் நெரிசலைத் தடுக்க சபரிமலையில் புதிய நடைமுறை

(சபரிமலை)

ஐயப்பன் சன்னதி முன்பாகவும், சுற்றுப் பிரகாரத்திலும் பக்தர்களின் நெரிசலை குறைக்க புதிய நடவடிக்கைகள் ஏற்படுத்தப் படுகின்றன.

மண்டல கால பூஜைகள் மற்றும் மகர விளக்கு வைபவங்களுக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் கோடிக்கணக்கான பக்தர்களை எதிர்கொள்ளத் தயாராகி வருகிறது.

இதில் முக்கியமாக , ஐயப்பன் சன்னிதானம் முன்பும் சுற்றுப்பிரகாரத்திலும் திரளும் பக்தர்களை சமாளிக்கவும் , பக்தர்கள் எளிதாகவும் விரைவாகவும் சுவாமி தரிசனம் செய்யவும் வசதிகள் ஏற்படுத்த திருவிதாங்கூர் தேவஸ்தான சபை ஆலோசித்து வருகிறது.

சுவாமி தரிசனம் முடிந்து வரும் பக்தர்கள் இறங்கி வரும் பகுதியில் நெரிசலைத் தவிர்க்க அங்கு தற்போது அமைக்கப்பட்டுள்ள தடுப்புக்கள் இன்னும் சற்று உள் பகுதிக்குள் அமைக்கப்படும்.பக்தர்கள் கொண்டு வரும் மணிகளை கட்டுவதற்கான இடம் தற்போதுள்ள கணபதி கோவிலுக்கு முன்பகுதியில் இருந்து அருகேயுள்ள நாகராஜா கோவிலின் பின்புறத்திற்கு மாற்றப்படும்.

அபிஷேகத்திற்கான நெய்யை கொண்டு வரும் பக்தர்கள் செல்லும் பாதையும் அபிஷேகம் செய்தபின் பக்தர்கள் செல்லும் பாதையின் அகலம் மேலும் குறைக்கப்படும்.

தற்போது கணபதி ஹோமம் செய்யப்படும் இடம் மண்டலகாலம் மற்றும் மகரவிளக்கு வைபவ காலத்தின் போது சகஸ்ர கலசாபிஷேகம் நடத்தும் மண்டபத்திற்கு மாற்றப்படும்.

சன்னதிக்கு அருகே நெய் அபிஷேகத்திற்காக செல்லும் பக்தர்கள் பயன்படுத்தி வரும் மேம்பாலம் அங்கிருந்து அகற்றப்படும். கோவில் சுற்றுப் பிரகாரத்தில் பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் எளிதாக செய்வதற்கும் நெய் அபிஷேகத்திற்காக பக்தர்கள் செல்வதற்கும் வசதி செய்யப்படுகிறது. (ஸ்ரீ-2)


# kalaimagal International College

NOTHING IS IMPOSSIBLE

**கலைமகள் சர்வதேச கல்லூரி 2011 ஆம் ஆண்டிற்கான அனைத்து வகுப்புக்களுக்கும் விண்ணப்பப்படிவங்கள் செப்ரம்பர் 15 ஆம் திகதி முதல் உள்வாங்க உள்ளதால் உங்கள் சிறார்களையும் எமது கல்லூரியில் இணைத்துப் பயன்பெற அனுமதிக்கு முந்துங்கள்.**

## எமது சிறப்பான செயற்பாடுகளாவன:-

- முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த) வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்ட முழுநேர தனியார் பாடசாலை (English Medium)
- Play Group முதல் Grade - 05 வரை 'Oxford' பாடத்திட்டமும் Grade- 06 முதல் G.C.E.(A/L) வரை இலங்கைப் பாடத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் கல்விக்கொள்கை.
- ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட தரம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
- சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- பிரத்தியேக சீருடை
- சிறார்களுக்கான சிறுவர் பூங்கா
- கணனி ஆய்வு கூடம்
- விஞ்ஞான ஆய்வு கூடம்
- நூலகம்
- சாதாரண மக்களும் முகம் கொடுக்கக் கூடிய மிகக் குறைந்த கட்டண வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழி மூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கிலமொழி மூலமும் சிங்களம் விருப்பத்திற்குரிய பாடமாகவும் காணப்படும் கற்பித்தல் செயற்பாடு
- அரச பாடசாலைகளின் நேரசூசியைப்பின்பற்றும் கல்விக் கொள்கை
- கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடாக உள்வாங்கும் அமைப்பு
- மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வருடாந்த பரிசளிப்புவிழா, கலை விழா என்பன உள்வாங்கப்பட்ட அமைப்பு



இன்னும் பல அரிய செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் பிரதான கிளைகள், சாவகச்சேரி,கொக்குவில், நெல்லியடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டும் இக்கிளைகளில் மட்டுமே முன்பள்ளி முதல் க.பொ.த. (உ/த) வரையிலான வகுப்புக்கள் உள்வாங்கப்பட்டு உள்ளன. ஏனைய அச்சுவேலி, மானிப்பாய், பருத்தித்துறை, கொடிகாமம், நல்லூர் கிளைகளில் Play Group L.K.G,U.K.G போன்ற வகுப்புக்கள் மட்டுமே ஆரம்பிக்கப்பட உள்ளன. இக் கிளைகளில் இணைந்து கொள்ளும் சிறார்கள் தமது மேல்வகுப்புகளுக்கு கிட்டிய பிரதான கிளைகளில் ஒன்றில் இணைந்து கற்கக்கூடிய வகையில் எமது வடமாகாண செயற்திட்டம் காணப்படுகிறது என்பதையும் இங்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

எமது கல்லூரியின் 2011 விண்ணப்பங்கள் செப்ரம்பர் 15 முதல் உள்வாங்கப்பட உள்ளதால் உங்கள் பிள்ளைகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளவும், சமர்ப்பிக்கவும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

The Director:
**kalaimagal International College**
Church Lane, Kulappiti Junction,Kokuvil.
தொ.பே: 021 3215785, 0778834592.

(சி-1284)

தங்கத்திலோர் குறையிருந்தால் தரத்தினில்
குறைவதுண்டோ– உடல்
அங்கத்திலோர் குறையுண்டாயின் அன்பு
குறைவதுண்டோ –*பாகப்பிரிவினை*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா!

"குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா..." என்ற இந்தப் பாடல் வரிகள் நெஞ்சை நெக்குருக வைப்பன.

அந்தளவிற்கு அந்தப்பாடலின் பொருளும் இசையும் இனிமை தருவனவாய் அமையும். அத்தகைய சிறப்பு மிக்க இப்பாடல் தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்ட விளம்பரம் ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்தது.

அங்கக் குறையுள்ளோர் பணிபுரியும் அந்த நிறுவனம், தனது உற்பத்திப் பொருட்களுக்கான விளம்பரத்தின் போது, அங்கக்குறையிருந்தும் மன உறுதியோடு பணிபுரியும் ஆயிரக்கணக்கான பணியாளர்களை காண்பிப்பதோடு கூடவே குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா... என்ற பாடலையும் இசைக்க விடுகின்றது.

இதைப் பார்த்த போதெல்லாம் நெஞ்சம் உள்ளுருகி அழும்.

ஆம், நடந்து முடிந்த போரினால் அங்கவீனமாகிப்போன ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகள் எந்தவிதமாக தொழில் வாய்ப்புக்களும் இன்றி வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர்.

எதிர்காலத்தில் தமது பிள்ளைகள் தம்மைக் காப்பாற்றுவார்கள் என்று நம்பியிருந்த பெற்றோர்கள் இன்று முதுமைப் பருவத்திலும் யுத்தத்தினால் அங்கவீனமடைந்த தமது இளம் பிள்ளைகளை தாங்கி நிற்கும் பரிதாபத்தில் கண்ணீர் வடிக்கின்றனர்.

முன்பெல்லாம் சொற் களஞ்சியத்தில் இடம் பெற்றிராத அல்லது எந்தவித முக்கியத்துவமும் கொண்டிராத மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற சொற்பதங்கள் இன்று பலதடவைகள் பல பேரால் உச்சரிக்கப்படுவனவாக உள்ளன.

இவை சொல் வடிவிலேயே நீண்ட காலமாக இருப்பதனால் அவற்றின் பொருள் உணர்வதிலும் கடினமிருக்கின்றது.

வெறும் பேச்சுக்களால் எந்தப் பயனும் ஏற்படமாட்டாது என்பதன் அடிப்படையில், செயல் வடிவம் கொடுக்க வேண்டிய பல விடயங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் இருப்பதை உணர வேண்டும்.

அதில் ஒன்று யுத்தத்தால் அங்கவீனமுற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்களை வழங்குவதாகும்.

இதற்காக உற்பத்தி நிறுவனங்களை ஆரம்பிப்பதும் அதில் அங்கவீனமுற்றவர்களுக்கு வேலை வழங்குவதும் கட்டாயமானதாகும். இது தொடர்பில் விசேட திட்டங்களை அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் இணைந்து செயலாற்ற வேண்டும்.

தேவையான நிதியை அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியவில்லை என்றால், வெளிநாடுகளில் இருக்கும் எங்கள் தமிழ் உறவுகளிடம் உதவியைப் பெற்று அதனைக் கொண்டு தொழிற்சாலைகளை நிறுவி, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட– அங்கவீனமடைந்தவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவது அவசியம்.

தேவையாயின் அங்கவீனமடைந்தவர்கள் தங்குவதற்கான விடுதி வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

கொழும்பிலிருந்து கோழிமுட்டையை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரும் பரிதாபம் இருக்கும் போது, மிகப் பாரிய கோழிப்பண்ணைகள் கூட இங்கு அமைக்கப்படலாம் என்ற சாதாரண சிந்தனை எழுமாக இருந்தால் கூட வீட்டுக்குள் இருந்து கண்ணீர் விடும் எங்கள் உறவுகள்.

குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா... என்று பாடுவதற்கும் மகிழ்வோடு வாழ்வைத் தொடங்குவதற்கும் வழிவகுக்கும்.

மறை மூர்த்தி கண்ணா வேண்டியதைத் தந்திட உதவிடுவாய்.

# ஐக்கியப்பட்ட சமூகவாழ்வின் ஸ்தாபனமாக விளங்கிவரும் ஐக்கிய நாடுகள் சபை

ஐக்கியநாடுகள் அமைப்பானது வோஷிங்டனில்1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி கலிபோர்னியாவிலுள்ள சான்பிரான்சிஸ்கோவில் ஆரம்பிக்கப்பட்டது. ஐ.நா அல்லது யு.என்(UN)என அழைக்கப்படும் இதன் தலைமையகம் நியூயோர்க்கில் உள்ளது.தற்பொழுது இதில்191 உறுப்பு நாடுகளும் இவற்றுக்கு மேலாக உறுப்பினரல்லாத அவதானி நாடாக வத்திக்கான் நகர நாடும் விளங்குகின்றது.

அரபு, மாண்டரின், ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யமொழி மற்றும் ஸ்பானிய

## இன்று ஐ.நா தினமாகும்

மொழி என்பன ஐ.நா.வில் ஆட்சி மொழி களாகவும்இதன்பாதுகாப்புக்குழுவில் சீனா, பிரான்ஸ், ஐக்கியஇராச்சியம், ரஷ்யா மற்றும் அமெரிக்கா போன்றன அங்கம் வகிக்கின்றன.

1942 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் போர்க்கால கூட்டணியாக செயற்பட்ட ஐ.நா அமைப்பானது 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 இல் அனைத்துலக நிறுவனமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

ஐ.நா.வின் முக்கிய அமைப்புகளாக பொதுச்சபை, பாதுகாப்புச்சபை, பொருளாதார மற்றும் சமூகசபை, நம்பிக்கைப்பொறுப்புச்சபை, ஐக்கியநாடுகள் செயலகம், அனைத்துலக நீதிமன்றம் போன்றன விளங்குகின்றன.

ஐ.நா.வின் இன்றைய செயலாளர் நாயகமாக பான் கீ மூன் உள்ளார்.ஐ.நா ஆரம்பிக்கப்பட்டு அறுபத்தைந்து வருட காலத்திற்குள் மொத்தமாக எட்டு செயலாளர் நாயகங்கள் பதவி வகித்துள்ளனர். இவ்வகையில் ஐ.நா.வின் தோற்றப்பின்னணிகள் காணப்படுகின்றன.

[illegible]ப்பட்ட மனித சமூக வாழ்விற்காக அனைவரும் சுதந்திரம், பாதுகாப்பு, சமத்துவம், உரிமைகளோடு வாழ் வதற்காக உலகளாவிய ரீதியில் நாடு[illegible] சமூகங்கள், தனியார்களிடையேயான ஒட்டுமொத்த மேம்பாட்டிற்காக சமத்துவமின்மைகள், வன்முறைகள், முரண்பாடுகள், உரிமைமீறல்கள்,



வறுமை, பால்நிலை பாராபட்சங்கள் போன்றவற்றை குறைத்து, இல்லாதொழிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையானது பலகிளை நிறுவனங்களை தன்னுள்ளே கொண்டு மேம்பாடு நோக் கியதாக தனது செயற்பாடுகளை ஆற்றி வருவதனைக் காணலாம். எடுத்துக் காட்டாக UNHER, UNESCO, UN DP, UNO, UNWFP,Unicef.... போன்ற பலவற்றி னைக் குறிப்பிடலாம்.

தொகுப்பு:-அ.நிசாந்தி
சமூகவியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

உலக வரலாற்றில் ஐ.நா.வின் உருவாக்கம் என்பது உலக சங்கங்களை ஒருமைப்படுத்தும் ஒரு மைல் கல்லாகும்.

# மீட்கப்பட்ட வாகனங்கள் அடையாளம் காணப்பட்டது
# உரிய ஆவணங்களை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்

## கிளிநொச்சி அரச அதிபர் அறிவிப்பு

(கிளிநொச்சி)

போரின் போது கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட 2 ஆயிரத்து 50 மோட்டார் சைக்கிள்களும் அடையாளம் காணப்பட்டுள்ளது. உரிமையாளர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து விரைவில் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் இவர் மேலும் தெரிவித்ததாவது,

எம்மால் விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கிணங்க மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் டி.பி.எஸ். தர்மப்பிரியவின் ஆலோசனைக்கு அமைவாக தொழில்நுட்ப உதவி ஆணையாளர் எஸ்.ஏ.பிரேமரட்னாவின் தலைமையில் மோட்டார் பரிசோதகர் 12 பேர் அடங்கிய குழுவினர் போரின் போது கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட வாகனங்களை இரண்டாவது தடவையாக கடந்த 21 ஆம் திகதி முதல் நேற்றுவரை மூன்று தினங்கள் விசேட பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது 2 ஆயிரத்து 50 மோட்டார் சைக்கிள்களும் 250 ஏனைய வாகனங்களும் அடையாளம் காணப்பட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கக் கூடிய நிலையில் உள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதி, வாகனப்பதிவுப் புத்தகம் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி (கிராம அலுவலர்களின் உறுதிப்படுத்தலுடன்) ஆகிய ஆவணங்களைச் சமர்ப்பித்து மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (ந-5)

# எது இகழ்ச்சிக்குரியது?
# பரிசேயத்தனமா? பாவிமனமா?

சன்றோரின் நலம் என்று கூறப்படுவது அவருடைய பண்புகளின் நலமே. இந்த உலகில் சான்றோர், உயர்ந்தோர் என்று யாரைக் குறிப்பிடுகின்றோம்? நல்ல பண்புகள், குணநலன்கள் உடை யவரைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? எனவே இத்தகைய சான்றோர் தன்மை, உயர்வுத் தன்மை, ஒருவனு டைய பிறப்பினாலும், சமூகத்தினாலும் பணம், புகழ், படிப்பு, அந்தஸ்தினாலும் வருவதில்லை.


ஆனால், இன்றைய உலகம் இப்படிப்பட்டவர்களைத்தான் உயர்ந்த மதிப்பில் வைத்துள்ளது. ஆனால், இது உண்மையல்ல; போலி. இவர்கள் எட்டாக் கனியைப் போன்று வெளியில் மட்டும் நல்லவர்களாக நடிப்பர். ஆனால், உள்ளேயோ எல்லாவகை அசுத்தங்களும், குரோத தன்மைகளும் நிறைந்து காணப் படுவர்.

இயேசுவின் கண்ணோட்டத்தில் முதல் பிரிவைச் சார்ந்தவர்கள் அனைவரும் கடவுளால் சபிக்கப்பட்டவர்கள். இவர்கள் பரிசேயத்தனம் கொண்டவர்கள், பச்சோந்திகள், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள், போலி தீர்க்கதரிசிகள், வெளிவேடக்காரர்கள்.

அதேவேளையில், இயேசுவின் பார்வையில் உயர்ந்தவர்கள் யாரென்றால் இரண்டாம் பிரிவைச் சார்ந்த ஏழைகள், நசுக்கப்பட்டவர்கள், தாழ்ந்த சமூகத்தைச் சார்ந்தவர்கள், அநாதைகள், குழந்தைகள், பாவிகள், விபச்சாரிகள், விதவைகள். "ஏழைகளே நீங்கள் பேறு பெற்றவர்கள். ஏனெனில், இறையாட்சி உங்களுக்குரியதே" (லூக் 6:20) "குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். ஏனெனில் விண்ணரசு இத்தகையோரதே" (மத் 19:14) "நீதிமான்களை அன்று, பாவிகளைத் தேடி வந்தேன்"

"உனக்கு யாரும் தீர்ப்பிடவில்லையா? நானும் தீர்ப்பிடேன் இனி பாவம் செய்யாதே" (யோவா 8:10-11)

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்" (லூக் 23:43)



ஆம், இன்றைய நற்செய்தியும் இதையே வலியுறுத்துகிறது. இன்றை நற்செய்தியில் இரண் ( வகை மனிதர் களைப் பார்க்கின் றோம். இவர்கள் மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு வகை மனிதர்களைக் குறிக்கின்றனர்.

ஒரு சாரார் பரிசேயத்தனத்தையும்

## பரமபிதா காட்டிய பாதை

இன்னொரு சாரார் பாவி மனத்தையும் வெளிப்படுத்துகின்றனர்.

ஆம், அயலானை மறந்த எந்த நல்ல செயலும், மனிதனை மதிக்காத எந்த செபமும் இறைவனுக்கு உகந்த தல்ல. அவை வெறும் வெளிவேடங்கள், பரிசேயத்தனங் கள் நாம் எப்படி?

*ஜோன் ரொபேர்ட்*


அடம்பிடிக்கும் சிமெந்து வெண்படிவுகளுக்கு நிரந்தரத் தீர்வு
•சுவரில் ஈரக்கசிவைத் தடுக்கின்றது •பூச்சுப்பரப்பை 30% த்தால் அதிகரிக்கின்றது
AkzoNobel
யாழ்ப்பாண விநியோகஸ்தர்கள்
சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
கண்டி வீதி, சாவகச்சேரி
சிவகுமரன் என்ரபிறைஸ்
75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
Dulux
ஸ்பீட் பிறைம் அன்ட் சீல்
Dulux Weathershield Speed Prime & Seal
Water Based
World of Weathershield
பெயின்ற் பூசப்பட்டதன் பின் சிமெநீது வெண்படிவுகள் தோன்றுவதால் வீட்டு சுவர்களுக்கும் பெயின்றுக்கும் பாரிய சேதம் ஏற்படுவதை நீங்கள் அறிவீர்களா ?
இதற்குப் பொருத்தமான தீர்வு டியூலக்ஸ் ஸ்பீட் பிறைம் அன்ட் சீல். புதிதாக சிமெந்து பூசப்பட்ட சுவர்களுக்கு (2 வாரங்களுக்குப் பின்) இதனைப் பூசினால் மேற்பூச்சுகளில் ஏற்படும் நிறமாற்றத்தைத் தடுக்க முடியும். நீருடன் கலந்து பூசுவதால் ஆரோக்கியத்திற்கு பாதிப்பும் இல்லை.
சுவருக்கு சிமெந்து பூசப்பட்டபின் வெண்படிவுகள் மறையும் வரை காத்திருக்க வேண்டியதில்லை.


Dulux 3in1 Supreme
Dulux 3in1 Supreme
எப்பொழுதும் அதிக நன்மைகளை வழங்குகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?
Dulux 3in1 Supreme

# டுமினி, டி வில்லியர்ஸ் சதமடித்து அசத்தல் தென்னாபிரிக்கா தொடரை கைப்பற்றியது




(பெனோனி)

அதிரடி சதமடித்து டுமினியும், டிவில்லியஸும் அசத்த தென்னாபிரிக்க அணி 272 ஓட்டங்களால் சிம்பாவே அணியை வீழ்த்தி ஒருநாள் தொடரை 3:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள சிம்பாவே அணி 2 'இருபது-20', 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இதில் 'இருபது-20' தொடரை தென்னாபிரிக்கா 2:0 என்ற கணக்கில் சுவீகரித்தது.

தொடர்ந்து நடைபெற்ற முதலிரண்டு ஒருநாள் போட்டிகளில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி 2:0 என்ற கணக்கில் தொடரை தனதாக்கியது.

இன்னிலையில் மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் பெனோனியில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி டுமினி, டிவில்லியர்ஸின் அதிரடி இணைப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 399 ஓட்டங்களை எடுத்தது.

இதில் போல் டுமினி 117 பந்துகளில் (7 பவுண்டரிகள், 4 சிக்ஸ்சர்கள் அடங்கலாக) 129 ஓட்டங்களையும், ஏ.பி.டி வில்லியர்ஸ் 99 பந்துகளில் (5பவுண்டரிகள், 5சிக்ஸ்சர்கள் உட்பட) 109 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் எஸ்.டபிள்யூ.மஷகட்ஷா 2 விக்கட்டுக்களையும், நிகோல்சன், உற்ஷய, சிக்கும்புரா, எச்.மஷகட்ஷா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 400 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 29 ஓவர்களில் 127 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 272 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் தைபு 28, எர்வின் 24, உற்ஷயா ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் திரோன் 3 விக்கெட்டுக்களையும், அல்பி மோர்க்கல், பார்னல், போத்தா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க



அணி 3:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இப்போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த டுமினி ஆட்டநாயகனாகத் தெரிவானதுடன் தொடர் நாயகன் விருதை டி வில்லியர்ஸ் பெற்றார்.

# மெய்வல்லுநர் போட்டி பிற்போடப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தினரால். இன்று நடத்தப்படவிருந்த மரதன் ஓட்ட விளையாட்டு நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.


போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறியத் தரப்படும் என கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுநர் சங்கச் செயலாளர் சு.கனகராசா அறிவித்துள்ளார். (ந-5)

# ஆஸி.இந்தியா இன்று மோதல்

இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் மோதும் மூன்றாவது ஒருநாள் போட்டி இன்று மர்கோவாவில் நடக்கிறது. இதில் இந்திய அணி வெற்றி பெற்று 23 ஆண்டுகளுக்குப் பின் சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரைக் கைப்பற்றக் காத்திருக்கிறது.

இந்திய, அவுஸ்திரேலிய அணிகள் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் மோதுகின்றன. கொச்சியில் நடக்கவிருந்த முதல் போட்டி மழையால் இரத்தானது. இரண்டாவது போட்டியில் இந்தியா 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுத் தொடரில் 1:0 என முன்னிலையில் உள்ளது. இந்நிலையில் மூன்றாவது மற்றும் கடைசிப் போட்டி இன்று கோவாவில் நடக்கிறது.

# மன்செஸ்டர் யுனைடெட்டுடன் ரூனி வாரம் 2 இலட்சம் பவுண் சம்பளம்




இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான வெய்ன் ரூனி தொடர்ந்தும் மன்செஸ்டர் யுனைட்டெட்க் கழகத்தில் விளையாடுவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.

மன்செஸ்டர் யுனைடெட் கழகத்திலிருந்து விலகி அதன் பரம வைரியான மன்செஸ்டர் சிட்டி கழகத்தில் இணையப்போவதாக 25 வயதான வெய்ன் ரூனி அறிவித்திருந்தார். இவ்வறிவிப்பு இங்கிலாந்து கால்பந்தாட்ட அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இவ்வறிவிப்பு குறித்து மன்செஸ்டர் யுனைடெட் கழகத்தின் முகாமையாளர் சேர் அலெக்ஸ் பேர்குஸன் கடும் விசனம் தெரிவித் திருந்தார். அதேவேளை மன்செஸ்டர் யுனைடெட் கழகத்தின் ரசிகர்கள் பலர் கடந்த வருடம் ரூனியின் வீட்டை சூழ்ந்துகொண்டு அக்கழகத் திலிருந்து ரூனி விலகுவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

ரூனி தனது மனைவி மற்றும் மகளுடன் தனது ஆடம்பரவீட்டில் இருந்த போது சுமார் 30 பேர் கொண்ட குழுவொன்று அவ்வீட்டை முற்றுகையிட்டது. அவர்களில் சிலர் முகமூடிகளையும் அணிந்திருந்தனர். அதையடுத்து ரூனி, பொலிஸாரை அழைத்து மேற்படி ரசிகர் களை கலையச் செய்தார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் தனது முடிவை மாற்றிக்கொண்ட ரூனி, தொடர்ந்தும் மன்செஸ்டர் யுனைடெட் கழகத்திலேயே இருக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

மேலும் 5 வருடங்களுக்கு-2015 ஆம் ஆண்டுவரை இக்கழகத்தில் விளையாடுவதற்கான ஒப்பந்தமொன்றில் வெய்ன் ரூனி கையெழுத்திட்டுள்ளார். இந்த ஒப்பந்தத்தின்படி ரூனியின் ஊதியமாக வாரமொன்றுக்கு 2இலட்சம் ஸ்ரேலிங் பவுண்கள் (சுமார் மூன்றரைகோடி இலங்கை ரூபா) வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி ஒப்பந்தத்தின்பின் மன்செஸ்டர் கழக முகாமையாளர் அலெக்ஸ் பேர்குஸனும் வெய்ன்ரூனியும் இணைந்து எடுத்துக் கொண்ட படத்தை மேலே காணலாம்.

# ஜெயரூபன், செல்ரனின் அசத்தல் இறுதிப் போட்டியில் பல்கலை அணி

ஜெயரூபன், செல்ரனின் சிறப்பான ஆட்டத்தினால் சென்றலைட் விளையாட்டுக் கழகத்தினை 8 விக்கெட்டுக்களால் வென்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் யாழ்.மாவட்டக் கழகங்களிடையே அணிக்கு 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

மேற்படி போட்டிகளின் இரண்டாவது அரையிறுதிப் போட்டி நேற்றுப் பிற்பகலில் நடைபெற்றபோது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியினை எதிர்த்து சென்றலைட் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்றலைட் விளையாட்டுக்கழகம் முதலில்துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. தொடக்கம் முதல் அடுத்தடுத்து விக்கெட்டுக்களையிழந்து ஓட்டங்களை எடுக்க சிரமப்பட்டது. 52 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்திருந்த சென்றலைட் அணியினை றொகான், ஜனோசன் துடுப்பாட்டம் தூக்கி நிறுத்தியது.

இருவரும் அதிரடியாக ஆட அணி 100 ஓட்டங்களைக் கடந்தது. ஜனோசன் 30 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார். தொடர்ந்து றொகான் 55 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்டமிழந்தார்.

பின்வரிசை வீரர்களும் கைகொடுக்காததினால் சென்றலைட் அணி 29.3 ஓவர்களில் 149 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

பந்துவீச்சில் யாழ்ப்பாண பல்கலை அணி சார்பாக ஜனார்த்தனன், ஜெயரூபன் தலா 3 விக்கெட்டுக்ளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 150 என்றவெற்றியிலக்கைநோக்கி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணிக்கு ஆரம்ப விக்கெட் ஜோடி நல்ல அடித்தளமிட்டது. ஆரம்ப வீரர்களான ஜெயரூபனும், சுஜந்தனும் சேர்ந்து இணைப்பாட்டமாக 52 ஓட்டங்களைப் பகிர்ந்த வேளை 28 ஓட்டங்களைப் பெற்றிருந்த சுஜந்தன் ஆட்டமிழந்தார்.

அவருடைய இடத்தினை நிரப்புவதற்காக லவன் களம் புகுந்தார். மறுமுனையில் அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த ஜெயரூபன் 41 ஓட்டங்களுடன் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். ஜெயரூபன் ஆட்டமிழக்கும் போது பல்கலை அணி 92 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடர்ந்து செல்ரன் களமிறங்கி அதிரடியாக ஆட பல்கலைக்கழக அணியின் வெற்றி உறுதியானது. 21.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்ளை மாத்திரமிழந்து வெற்றியிலக்கை அடைந்தது யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி. இதில் வெல்ரன் 43 ஓட்டங்களுடனும், லவன் 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியுடன் மோதவுள்ளது.

# ஐ.நா. தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம் நடத்தும் ஐ.நா.தினம் 2010.10.24 காலை 10 மணியளவில் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். அன்றைய தினம் ஐ.நா.சபையின் நோக்கங்களும் ,சாதனைகளும் என்ற தலைப்பில் அனுப்பப்பட்ட கட்டுரைகளுக்கான சான்றிதழ்களும் ,பரிசில்களும் வழங்கப்படவிருப்பதாக யாழ்ப்பாண லயன்ஸ் கழகத் தலைவர் கூறியுள்ளார்.

ஐ.நா.பிரதிநிதிகளும் 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் ஜெயவத்சலம் அவர்களும் கலந்து கொள்வர்.

மாணவர்களின் விபரமும் ,பாடசாலையும் வருமாறு,

வீ.வினுசியா(யா/க.ம.ம.வி),ச.பவிதா (யா/க.ம.ம.வி.),சே.சுலோசனா (யா/க.ம.ம. வி), உ.ஜெயப்பிரியா(யா/சுண்டு. ம.க.),ச.யேனுஷா(யா/வட்டு இந்து.க.),செ.சேந்தன்(யா/இந்து க),தி.மயூரசாகித்தியன்(யா/இந்து க.) ஜெ.டென்சி(யா/கோ.கிறி.க.),தி.நிதீபன் (அச்சுவேலி), செ.விஜித்திரா(சங்கானை),வி.சர்மினி (கைதடி),செ.சேயோன் (யா/இந்து க.),ட.கீர்த்தன்(யா/புனித பத்திரி.க.),க.தேவிகா (சுளிபுரம்,வி.தனுசியா (யா/வட இந்து ம.க.),த.சர்மிகா (யா/க.ம.ம.வி),சி.பவித்திரா (யா/மீசாலை வீரசிங்கம் ம.ம.வி.),சாரதாஜினி (யா/திருக்குடும்ப கன்னியர்),த.விதுர்ஷிகா (கோண்டாவில்),இ.கஜீபன் (யா/மகாஜனக் கல்லூரி),ஜெ.மாதவன் (யா/சென்.பற்றிக் க.)க.யரூஷனா(யா/மகாஜனக் கல்லூரி), ஜே.ஆருரன் (யா/இந்து க.),ச. அஜந்தா(யா/வல்வை ம.ம.வி), ச.அனுஷா(யா/வல்வை ம.ம.வி),சந்தோஷ் (யா/சென் பற்றிக்க.), பா.கிரிஸா (யா/மீசாலை வீரசிங்கம் ம.ம.வி),ப.சோபிஜா(யா/இந்து ம.க), த.அம் (யா/க.ம.ம.வி.),வ.அனுராஜ் (யா/க.ம.ம.வி), ஜெ.மதிவதனி (யா/க.ம.ம.வி.), பொ.ஜிந்துஜா(யா/க.ம.ம.வி ஜெ.ஜெயவர்மன் (யா/ம.க), கு.சோபனா (சித்தன்கேணி), க.பிரஜாத் (யா/வட்டு.யா.க.), த.கர்ஜனா (யா/க.ம.ம.வி), சோ.சுலோஜனா (யா/க.ம.ம.வி),

(ந-5)

# இலங்கை செல்வது குறித்...

என ஆலோசனைக் குழுவின் தலைவர் தருஸ்மன் தெரிவித்தார்.

இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஐ.நா. செயலாளரினால் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவினர் இலங்கைக்கு வருவதற்கு விஸா வழங்க மாட்டோம் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆரம்பத்திலேயே அறிவித்திருந்தார்.

இந்நிலையில் ஐ.நா.செயலாளரின் ஆலோசனைக் குழுத் தலைவர் தருஸ்மன் இவ்வாறு தெரிவித்திருப்பது இலங்கை அரசுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் கடந்த மாத இறுதியில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த ஐ.நா.செயலர் பான் கீமூன் தனது ஆலோசனைக் குழு இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்தமாட்டாது என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# இலங்கை...

கடலோர காவல்படையினர் அது பற்றி விசாகப்பட்டினத்தில் உள்ள தங்கள் தலைமையகத்துக்கு தகவல் தெரிவித்தனர்.

அவர்களை கைது செய்யுமாறு கடலோரக் காவல் படையின் கப்பல் கங்காதேவிக்கு உத்தரவிடப்பட்டது.

இதனையடுத்து கப்பலில் விரட்டிச் சென்று மீனவர்களை ஆந்திர கடலோரக் காவல் படையினர் கைது செய்தனர். விசாகப்பட்டினம் பொலிஸில் படகுகளுடன் மீனவர்களை ஒப்படைத்தனர். (ந-5)

# வடக்கில் ஒரு இலட்சம்...

தொடர்ந்து உரையாற்றிய பிரதியமைச்சர் முரளிதரன்,

இலவசமாக எல்லாவற்றையும் தருவார்கள் என்று எதிர்காலத்தில் நாங்கள் கையேந்தியிருப்பதை தவிர்க்கவேண்டும். நாங்கள் கடுமையான உழைப்பாளிகள். அந்த உழைப்பை நாங்கள் திரும்பக் கொண்டுவர வேண்டும்.

இதே வேலைத் திட்டத்தை நான் யாழ்ப்பாணத்திலும் செய்து வருகின்றேன். இன்று மீள்குடியேற்ற அமைச்சராக நான் இருப்பதால் சகல பொறுப்புக்களும் என் தலை மேல் உள்ளது.

இன்னும் அங்கு ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை குடியேற்ற வேண்டிய தேவையிருக்கின்றது. உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் 67 ஆயிரம் பேரும் வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வந்த மக்கள் 27 ஆயிரம் பேரும் புத்தளத்தில் 60 ஆயிரம் பேர் குடியேற்றப்படுவதற்கு இருக்கின்றனர்.

இவ்வாறான பாரிய பொறுப்பில் நாங்கள் இன்று இருக்கின்றோம்.

நான் நினைக்கின்றேன் வெகுவிரைவில் வன்னி மக்களையும் பாரிய அபிவிருத்தி நிலைக்கு கொண்டு வந்து விடலாம் என்று. ஆனால் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருப்பதன் மூலமே அபிவிருத்தியை கொண்டுவரலாம். ஆனால் பிரிந்திருந்து செயற்பட்டால் வாய்ப்பை தவற விடுவோம். அபிவிருத்தியென்பது அரசியலுடன் பின்னிப்பிணைந்துள்ளது.

அதனால் எமக்கு எந்த அரசியல் வாய்ப்பாக இருக்கின்றதோ அதனையே வாய்ப்பாக பயன்படுத்த வேண்டும். எந்த நாளும் உரிமையை பேசிப்பேசி இருக்கிறதையும் இல்லாமல் செய்யவேண்டாம். நான் இன்னும் தொப்பிகலக் காட்டில் இருந்திருந்தால் இதில் இருக்கின்ற மிச்ச பிள்ளைகளும் இருந்திருக்காது. ஒருவரையும் உயிரோடு பார்த்திருக்க முடியாது. அப்படியே எல்லோரும் குட்டிச்சுவராக போயிருப்போம் என மீள்குடியேற்ற பிரதியமைச்சர் வி.முரளிதரன் தெரிவித்தார். (ந-5)

# போர்க் குற்றங்களை மறை...

ஐக்கிய நாடுகள் சபை, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் மத்தியில் இலங்கை தொடர்பிலான நற்பெயரை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் பிரித்தானியாவில் பெல் பொட்டிங்கர் குறூப் என்ற பரப்புரை நிறுவனத்தை பணிக்கு அமர்த்தியுள்ளதாக பி.பி.சி. தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை அரசாங்கம், தமது அரசாங்கத்தினதும் மக்களினதும் நலன்கள் கருதி பலபரப்புரை நிறுவனங்களை பணிக்கு அமர்த்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ள போதிலும் அந்த நிறுவனங்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

அதேபோன்று பெல் பொட்டிங்கர் குறூப் என்ற பரப்புரை நிறுவனமும் இது குறித்த விபரங்களை வெளியிட மறுப்புத் தெரிவித்துள்ளது.

வன்னியில் கடந்த வருடம் இடம்பெற்ற போரின்போது படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தன.

அத்துடன் உள்நாட்டில் ஊடக சுதந்திரம் நசுக்கப்படுவதாகவும் மனிதவுரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாகவும் சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு எதிராக குற்றம் சுமத்தியிருந்தன.

சர்வதேச சமூகத்தில் ஏற்பட்ட அவப்பெயரை மாற்றும் ஒரு நோக்குடனேயே பிரித்தானியாவின் பெல் பொட்டிங்கர் குறூப் என்ற பரப்புரை நிறுவனத்தை பணிக்கு அமர்த்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவுக்கு கடந்த வாரம் விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் விஜயத்தின் போதும் இக் குறிப்பிட்ட நிறுவனம் இலங்கை சார்பில் பரப்புரைகளை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன், நிபுணர்கள் குழுவை நியமிக்க முற்பட்ட வேளையில் அதனைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் இந்த நிறுவனத்தை நாடியதாகவும் தெரியவருகின்றது. (ந-5)

# முன்னாள் புலிப்...

இணைந்து அரசியலில் பிரவேசித்துள்ளார்கள்.

இவர்களை போன்று இன்று விடுதலை ஆகும் புனர்வாழ்வு பயிற்சி பெற்ற முன்னாள் விடுதலைப் புலிகளும் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என அழைப்பு விடுத்திருக்கின்றேன்.

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களான புனர்வாழ்வு பயிற்சி பெற்ற இளைஞர், யுவதிகள் திறமைசாலிகள். தமது திறமைகளை அவர்கள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து சமூகத்திற்கு பயன்படுத்த தக்க வகையில் பிரயோகிக்க வேண்டும்.

முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களான புனர்வாழ்வு பயிற்சி பெற்ற இளைஞர் யுவதிகளுக்கு இது விடயத்தை நாம் வேண்டிய உதவிகளையும் ஒத்தாசைகளையும் செய்யத் தயாராக இருக்கிறேன் என்றும் குறிப்பிட்டார். (ந-5)

# ஐ.தே.கட்...

களில் சிலருக்கும் தற்போது புதிதாக அரசாங்கத்துடன் இணையவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு வருக்கும் அமைச்சுப் பதவிகளையும் வழங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது. (ந-5)




கலைமகள் அழகு நிலா

பயிற்சி நிலையம்

❖ பெண்களே உங்களுக்கான அரிய சந்தர்ப்பம் நழுவவிடாதீர்கள்...

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் 20 வயதிற்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளுக்கும், தந்தையை இழந்த இளம் பெண்பிள்ளைகளுக்குமான ஏழு நாள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சி முடிவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சை இடம்பெறும். பயிற்சியில் பங்குபற்ற விரும்புவோர் தங்களது கிராம அலுவலகர் அத்தாட்சிப் பத்திரத்துடன் சமூகமளிக்கவும்.

பயிற்சிகள்

- ★ Facial (8 வகை)
- ★ Threading
- ★ Pimple Treatment
- ★ Waxing
- ★ Hair Stratening
- ★ Hair Perming
- ★ Hot oil Massage
- ★ Hair Cutting
- ★ Hair dry
- ★ Hair Colouring
- ★ Pedeicure Manicure
- ★ கறுப்புக் காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்
- ★ Bleaching
- ★ Bridal make up (5வகை)

நேர்முகப்பரீட்சை: 29.10.2010, 30.10.2010 காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை

அனுமதிக் கட்டணம்: 2000/=
பயிற்சி ஆரம்பம்: 01/11/2010
பயிற்சி நேரம்: காலை 9.30 - மாலை 4 மணி வரை

கலைமகள் அழகுநிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-1454)

தொழில் உத்தரவாதமான ஊடகக் கற்கைகள்
அனைத்தும் ஒரே கூரையின்கீழ்

பத்திரிகை | தொலைக்காட்சி | வானொலி | இணையம்

ஊடகக் கற்கைகள்
MEDIA STUDIES

IT ORIENTED JOURNALISM
தொடர்பாடல் திறன்கள், செய்தி சேகரிப்பு, எழுதுதல், விவரணக் கட்டுரையாக்கம், அடிப்படை கணினி - இணையப் பயிற்சி

NEWSPAPER LAYOUT
பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் பக்க வடிவமைப்பு, வரைகலை (Graphic) அடிப்படைகள், Word, PageMaker, Photoshop

PROFESSIONAL PHOTOGRAPHY
ஒளிப்படக்கலை அடிப்படைகள், கலைத்துவ படப்பிடிப்பு நுட்பங்கள், SLR, Digital Camera Techniques, Photo Editing, Studio Lab Training & More...

CREATIVE GRAPHIC DESIGNING
வாழ்த்து மடல், அழைப்பிதழ், விளம்பர வடிவமைப்பு, பதாகைகள், Photo Editing, Album Desinging, Broachers, Banners & Hoardings, Coral Draw, Photoshop, Indesign

RADIO JOURNALISM
வானொலி ஊடகவியல் அடிப்படைகள், அறிவிப்புக்கலை, வானொலி எழுத்துருவாக்கம், நிகழ்ச்சித் தயாரிப்பு, ஒலித்தொகுப்பு (Audio Editing)

TV JOURNALISM
தொலைக்காட்சி ஊடக அடிப்படைகள், தொலைக்காட்சி அறிவிப்பு, தொலைக்காட்சி எழுத்துருவாக்கம், வீடியோ படப்பிடிப்பு, நிகழ்ச்சித் தயாரிப்பு, படத்தொகுப்பு (Video Editing)

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளன அங்கீகாரம் பெற்ற பயிற்சியாளரின் நெறிப்படுத்தலில், கொழும்பு - இந்திய - பிரித்தானிய ஊடக வல்லுநர்களின் வழிகாட்டலுடன் முற்றிலும் செயன்முறைப் பயிற்சிகளுடன் நடைபெறும்

நூலக வசதி - கணினி ஆய்வுகூடம்
Audio – Video Lab - Recording Studio
கலை, இலக்கிய நயம் - சினிமா, குறும்பட காட்சிகள்

வகுப்புகள் ஆரம்பம்: ஒக்டோபர் 30 சனி



சிகரம் ஊடக இல்லம்
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60, நேரடி: 077 77 33 931
பதிவுகளுக்கு முந்துங்கள்
MEDIA

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 222 4459, 0774192275, Fax:222 4460

COMPUTER REPAIRING
Computer (Laptop, Desktop) Monitor, UPS, என்பன உங்கள் நிறுவனம் or வீடுகளுக்கு வந்து பழுதுபார்த்து கொடுக்கப்படும். உங்கள் கணனிகளில் ஏற்படும் வைரஸ் பிரச்சனைகளுக்கு (ESET Smart Security 1Year License Verson with 1GB Kingston Micro SD Free. Rs. 1860 மட்டுமே) அனைத்து கணனிகளின் உதிரிப்பாகங்களையும் குறைந்த விலைகளிலும், உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.
(கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்)

VACANCY
விற்பனை உதவியாளர், கணக்குப்பதிவாளர், (ஆண்/பெண்) ஆசனப்பதிவாளர்.
STR Multi Center, 45, Adiyapatham Rd, Thirunelvely. T.P-0777570150
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட திருமண அழைப்பிதழ்கள் விற்பனைக்குண்டு.

காணி விற்பனைக்கு
அளவெட்டி மலைவேம்படிச் சந்திக்கு அருகில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0754636860
(2704)

நீங்கள் 16 வயதுக்கு மேற்பட்டவரா!
உயர் கல்வி? தொழில்? கவலையை விடுங்கள்.
Government Schol.
A/L, O/L தேவையில்லை
BIT, CIMA-UK, Engineering-USA
நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
Closing Date 25.10.2010
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL
MCS
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும்,
SMS your name & course to 772 395 895 & Get Schol.
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Campus Junction, Jaffna.

Galaxy Cabs
Call us 021 3201201
யாழ் நகரில் முதல் முதலில் அறிமுகமாக்குகின்றோம்.
Call Cabs சேவைவை. 35/= Per Km.

STR TRAVELS
யாழ்-கொழும்பு சேவை ஆசனப் பதிவுகளிற்கு
021-4921921

Victoria YOGHURT
மங்கலகரமான ஆரம்பம்
சிறு குழந்தைகள் முதல் வயோதிபர் வரை
விற்றமின்களை அள்ளி வழங்கும் Denmark Dairy Lanka வின்
சுவைமிக்க ஜோக்கட்கள் இன்று முதல் உங்கள் கைகளுக்கு..
Denmark Dairy Lanka
021 222 0339
Distributor:
Koormai Multi vision
Paramesvara Junction
Thirunelvely, Jaffna.
(C-1451)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.